01st January 2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 12 | பக்கங்கள் - 12 | editor.uthayam@gmail.com




# தேர்தல் கூட்டுக்கு தயாராகும் பிரதான அரசியல் கட்சிகள்

## அரங்கேறும் கட்சி தாவல்கள்

### சஜித், அனுர, தம்மிக்க, ரணில் களத்தில்



உதயமாகும் புத்தாண்டில் நாடு எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் கட்டாயமாக நடத்தப்படவேண்டிய ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வதற்காக பிரதான அரசியல் கட்சிகள் தயாராகி வருகின்றன.

பிரதான கட்சிகளை அடிப்படையாகக் கொண்ட மூன்று கூட்டமைப்புக்கள் உருவாகி தேர்தலில் போட்டியிடலாம் என அரசியல்

02ம் பக்கம்பார்க்க...

# இரத்து செய்யப்படும் தேசிய பாடசாலைகள்

## மாகாண சபைகளின் கீழ் இயங்கும் கல்வி மேம்பாட்டிற்கு முன்மொழிவுகள்

(ஐ.ஏ காதிர் கான்)

நாடளாவிய ரீதியிலுள்ள தேசிய பாடசாலைகள் அனைத்தும், மாகாண சபைகளுக்குக் கீழ் இயங்கும் மாகாண பாடசாலைகளாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கான முன்மொழிவுகள், கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் பிரகாரம் முன் வைக்கப்பட்டுள்ளதாக, கல்வி தொடர்பான தரவுகள் தேர்வுக் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் வீ. ராதா கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இதன்பிரகாரம், இதுவரை "தேசிய - மாகாண" என்ற பெயர்களில் இரு தரங்களில் செயற்பட்டு வந்த பாடசாலைகள் அனைத்தும், இனிமேல் ஒரே தரத்தின் கீழ் "மாகாண

02ம் பக்கம்பார்க்க...

# அதிகரித்துள்ள எரிபொருள் விலை

இன்று காலை 5 மணி முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருள் விலைகளில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சிபேட்கோ அறிவித்துள்ளது.

ஒக்டேன் 92 ரக பெட்ரோல் ஒரு லீட்டர் 20 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. புதிய விலை - 366 ரூபா.

ஒக்டேன் 95 ரக பெட்ரோல் ஒரு லீட்டர்

02ம் பக்கம்பார்க்க...



# 14 நிமிட இம்ரானின் உரையை 45 இலட்சம் மக்கள் பார்வை

(நமது நிருபர்)

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான், நீதிமன்ற உத்தரவின் பேரில் பாகிஸ்தான் சிறையில் சிறைவாசம் அனுபவித்து வருவதை யாவரும் அறிந்ததே.

இந்நிலையில், அவர் சிறையிலிருந்த வண்ணம் பாகிஸ்தான் நாட்டு மக்களுக்கு உருக்கமான, கம்பீரமான, மிகவும் தெளிவான உரையொன்றின் மூலம் அழைப்பு விடுத்துள்ளார்.

இவரது இந்த உரையை, பாகிஸ்தானிய 4.5 மில்லியன் மக்கள், மிக விருப்பத்துடன் ஆர்வமாக பார்வையிட்டுள்ளார்கள். மக்கள் மிகுந்த உத்வேகத்துடன் அவரது உரையை செவிமடுத்திருக்கிறார்கள். அவர் மீது மக்கள் வைத்துள்ள

03ம் பக்கம்பார்க்க...

# நிலையான அரசு அமைப்பதே எமது முதன்மை கடமை

## மஹிந்த ராஜபக்ஷ திட்டவட்டம்



(நமது நிருபர்)

எதிர்வரும் தேர்தல் மூலம் நிலையான அரசாங்கத்தை அமைப்பதே, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முதன்மையான கடமை என, பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் வற் (VAT) அதிகரிக்கப்பட்டதன் காரணமாக, 2024 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பிரதான அரசியல் பேசு பொருளாக அமையும் என்றும், வரி அதிகரிப்பானது, பாரிய

02ம் பக்கம்பார்க்க...

# கூட்டு திட்டங்கள் மூலம் அபிவிருத்தி இலக்குகளை அடைவோம்

## தெளிவுபடுத்துகிறார் சஜித் பிரேமதாச



(ஐ. ஏ. காதிர் கான்)

இளைஞர்களுக்கு அரசியல் வாக்குறுதிகளை வழங்கி, இளைஞர்களைக் குழப்பும் அரசியல் கலாசாரம் எமது நாட்டில் காணப்படுகின்ற போதிலும், ஐக்கிய மக்கள் சக்தி பெரும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளதாக, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, பிங்கிரிய தொகுதி ஐக்கிய இளைஞர் சக்தியின் குழுக் கூட்டத்தில் கலந்து

02ம் பக்கம்பார்க்க...

# ஐ.தே.க வுக்கு எழுவர் கொண்ட தலைமைத்துவ சபை

**சிறுபான்மைக்கு கதவடைப்பு**

7 பேர் கொண்ட தலைமைத்துவ சபைப் சிறுபான்மை

02ம் பக்கம்பார்க்க...

# அனைவருக்கும் வரி; கட்டாயமாக்கும் அரசு

(ஐ.ஏ. காதிர் கான்)

எதிர்வரும் (2024) ஜனவரி முதலாம் திகதி முதல், பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட அனைத்து இலங்கைப் பிரஜைகளும், தம்மைப் பதிவு செய்து கொள்வது அவசியம் என, உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

02ம் பக்கம்பார்க்க...

# வேகமாகப் பரவிவரும் வைரஸ் தொற்று

## சுகாதாரத் துறையினர் எச்சரிக்கை

(ஐ.ஏ. காதிர் கான்)

நாட்டில் தற்போது வேகமாகப் பரவி

02ம் பக்கம்பார்க்க...

அமானா வங்கியில்
வாகன நிதியுதவி



உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

விதிமுறைகளும் நிபந்தனைகளும் பொருந்தும்*

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

அமானா வங்கி (PLC) ஆனது இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனுமதி பெற்ற ஒரு வர்த்தக வங்கி ஆகும் | ஃபிச் ரேட்டிங்: RWN (lka) ஸ்திரமான நிலை

## அனைவருக்கும்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிந்து கொண்டு, வரி செலுத்துனர் அடையாள இலக்கத்தை (TIN Number) பெற்றுக் கொள்ளுமாறும், அத்துடன் அதனை தம் வசம் வைத்திருப்பது கட்டாயமாகும் எனவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அவ்வாறு பதிவு செய்யாது இருப்பது, தண்டனைக்குரிய குற்றமாகும் என்றும், பதிவு செய்யாதவர்கள், 50 ஆயிரம் ரூபா அல்லது அதற்கு மேலான ஒரு தொகையை அபராதமாகச் செலுத்த வேண்டி வரும் என்றும், திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, வருடாந்தம் 12 இலட்சத்திற்கும் மேலாக வருமானம் பெறும் ஒவ்வொருவரும், வரி செலுத்துவதற்கான பதிவை மேற்கொள்ள வேண்டும் என்றும் திணைக்களம் மேலும் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

## வேகமாக...

(முன் பக்கத் தொடர்ச்சி)

வரும் வைரஸ் தொற்றுக்களுக்கு, வைத்திய ஆலோசனையின்றி நுண்ணுயிர் எதிர்ப்பிகளைப் பயன்படுத்த வேண்டாம் என, சுகாதாரத் துறையினர் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாட்டில் தொடரும் சீரற்ற கால நிலை காரணமாக, பல பிரதேசங்களில் தற்போது "இன்புளுவன்சா" உள்ளிட்ட "வைரஸ்" தொற்றுக்கள் வேகமாகப் பரவி வருகின்றன.

இந்த நிலையில், வைத்திய ஆலோசனைகளின்றி நுண்ணுயிர் எதிர்ப்பிகளைப் பயன்படுத்த வேண்டாம் என, சுகாதாரத் துறையினர் பொது மக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக, கொழும்பு தெற்கு (களுபோவில) போதனா வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் நந்தன திக்மதுகொட கருத்து வெளியிடுகையில், நீண்ட நாட்களாக காய்ச்சல் நிலவுமாயின், உடனடியாக அரச வைத்தியசாலைக்குச் சென்று வைத்திய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவித்துள்ளார்.

அவ்வாறான வைரஸ் தொற்றுகள் காற்றின் மூலம் வேகமாகப் பரவுவதால், 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் நாட்பட்ட நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் மிக அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும், குறித்த நோயிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக முகக்கவசத்தை அணிந்து கொள்ளுமாறும், விசேட வைத்திய நிபுணர் நந்தன திக்மதுகொட மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## ஐ.தே.க...

(முன் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதிகளுக்கு கதவடைப்பு

தலைமைத்துவ சபைக்கு சாகல ரத்நாயக்க, ரவி கருணாநாயக, ஹரீன் பெர்னாண்டோ, ருவன் விஜேவர்தன, வஜிர அபேவர்தன, அகிரவிராஜ் காரிய வசம், நவீன் திஸாநாயக்க ஆகியோர் நியமிக்கப்படவுள்ளனர்.

இதுவரை பெயர் குறிப்பிடப்பட்ட 7 பேர் தவிர்ந்த சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த வேறு எவரும் இதற்கு நியமிக்கப்படவில்லை.

## தேர்தல்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது. செப்டெம்பர் 18ஆம் திகதிக்கும் ஒக்டோபர் 08ஆம் திகதிக்குமிடையில் தேர்தல் நடத்தப்படவேண்டும். அரசியல் அமைப்பில் 31 (3 சரத்து) இதனையே குறிப்பிட்டுள்ளது. இம்முறை தேர்தலில் மூன்று கூட்டமைப்புக்கள் போட்டியிடுவதற்கு தயாராகி வருகின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐ.தே. கவை உள்ளடக்கிய கூட்டமைப்பொன்றை உருவாக்கி போட்டியிடுவதற்கு தயாராகி வருகின்றார். பொதுஜன பெரமுனவின் ஆதரவை ரணில் விக்கிரமசிங்க கோரியுள்ளார். பொதுஜன பெரமுன சார்பில் தனவந்தரும், கசினோ உரிமையாளருமான தம்மிக்க பெரேரா போட்டியிடுவதற்குத் தயாராகி வருகிறார். பொதுஜன பெரமுனவின் ஒரு சாரார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதாக தெரித்துள்ளனர்.

கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லன்சா மொட்டுக் கட்சியிலிருந்து 29 உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதாக இதற்கு முன் தெரிவித்திருந்தார். இதற்காக உருவாக்கப்பட்ட கூட்டமைப்பின் தலைவராக குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவாகியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதற்காக கூட்டமைப்பை உருவாக்குவதை முன்னாள் அமைச்சர் லன்சா, அனுர பிரியதர்ஷன யாப்பா ஆகியோர் துரிதமாக ஈடுபட்டு வருகின்றனர். இதற்கு இப்போதே மொட்டுக் கட்சி தொழிற்சங்கங்கள் பல இந்தக் கூட்டமைப்பில் அங்கத்துவம் பெற்றுள்ளன. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் கூட்டமைப்பொன்றை உருவாக்குவதற்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்காக ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு தலைவர் சஜித்துக்கு அதிகாரம் வழங்கியிருக்கின்றது. மொட்டுக் கட்சியிலிருந்து வெளியேறியுள்ள பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் பிரேமதாஸ வுடன் கூட்டமைப்புக்காக உடன்படிக்கையொன்றை கைச்சாத்திட்டுள்ளனர். நாலக கொடஹேவா, திலான் பீரிஸ், வசந்த யாப்பா பண்டார, கே.பீ.எஸ். குமாரசிறி, சன்ன ஜயசுமன ஆகியோர் இந்த அணியில் உள்ளனர்.

ஜாதிக ஹெலஉருமய கட்சி உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க ஐ.தே.க. சார்பில் போட்டியிடுவதாக வெளிவந்த செய்தியை மறுத்துள்ளார். இதேநேரம் இவரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட தயாராகி வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளை ஜே.வி.பி. தலைவர் அனுர குமார திசாநாயக்க எம். பி.பி. கூட்டமைப்பில் போட்டியிடவுள்ளார். இவரது முதல் தேர்தல் பிரசாரமாக பெண்கள் கூட்டமொன்று மாத்தரையில் சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்றது. சஜித் பிரேமதாஸ அநுராதபுரத்தில் தனது முதல் தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்தார். சிறுபான்மை கட்சிகள் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக முழுமையான முடிவுகள் எதனையும் இதுவரை எடுக்கவில்லை. தேர்தல் நெருங்குகின்ற கட்டத்திலேயே இக்கட்சிகள் தமது முடிவை எடுக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

## நிராகரிக்கப்பட்டது...

(முன் பக்கத் தொடர்ச்சி)

38 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. புதிய விலை - 464 ரூபா.

ஒட்டோ டீசல் ஒரு லீட்டர் 29 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. புதிய விலை - 358 ரூபா. சுப்பர் டீசல் ஒரு லீட்டர் 41 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. புதிய விலை - 475 ரூபா. .ஒரு லீட்டர் மண்ணெண்ணெய் 11 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. புதிய விலை - 236 ரூபா.

இதேவேளை நாடு முழுவதும் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நேற்று நீண்ட வரிசையில் காத்திருந்து பொது மக்கள் தமது வாகனங்களுக்கு எரிபொருளை நிரப்பிச் சென்றதை காணமுடிந்தது.

ஜனவரி முதலாம் திகதி முதல் வற் வரி அதிகரிப்பு மேற்கொள்ளப்பவுள்ளது.

## இரத்து...

(முன் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலைகளாக" இயங்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் இரு தரங்களிலுமுள்ள பாடசாலைகளையும், ஒரே தரத்தின் கீழ் இயக்குவதற்கான முன் மொழிவுகள் முன் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கல்வி அமைச்சு மேற்கொண்ட பாடசாலை ஆய்வு மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை, மாகாண மட்டத்திலான அதிகாரங்களின் கீழ் வழங்குவதற்கும், மறு பரிசீலனைக் குழுவின் சிபாரிசுகள் முன் வைக்கப்பட்டுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"தேசிய - மாகாண" மட்டத்திலான பாடசாலைகளை, ஒரே தரத்தின் கீழ் கொண்டு வருவதால், இவற்றில் கல்வி கற்கும் மாணவர்கள் மத்தியில் எவ்வித வித்தியாசங்களோ அல்லது வேற்றுமைகளோ இடம்பெற வாய்ப்பில்லை என்றும் குறிப்பிட்டுள்ள அவர், பாடசாலைகளும் சம நிலையில் இயங்கும் என்றும் மேலும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

## கூட்டு...

(முன் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

தனது வேலைத்திட்டம் பல முக்கிய பகுதிகளை உள்ளடக்கியுள்ளதாகவும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இதன்போது குறிப்பிட்டார்.

கல்வி முறையில் நல்ல மாற்றம் வர வேண்டும்:

இந்நாட்டின் கல்வி முறையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்த, தாம் எதிர்பார்ப்பதாகவும், நாட்டிற்குத் தரமான கல்வி முறை தேவை என்றும், அதில் குழந்தைப் பருவம், ஆரம்பப் பருவம், இடை நிலை, மூன்றாம் நிலை என நான்கு பகுதிகளாக உள்ளன என்றும், இது முறையான கல்வி மாற்ற முறைக்குட்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

சர்வதேச தொழிலாளர் சந்தையின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நவீன மற்றும் எதிர்கால கல்வி முறை உருவாக்கப்பட வேண்டும். இதற்காக ஒவ்வொரு பாடசாலையிலும் "ஸ்மார்ட்" வகுப்பறை, ஆங்கில மொழி மையம் உருவாக்கப்பட வேண்டும். இதனூடாக, "ஸ்மார்ட்" கல்வி, "ஸ்மார்ட்" பாடசாலை, "ஸ்மார்ட்" மாணவன், "ஸ்மார்ட்" இளைஞன், "ஸ்மார்ட்" குடிமகன், "ஸ்மார்ட்" நாடு உருவாகும். இதனை அடைய கல்வியில் முழுமையான மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும். கிராமிய நகர கல்வி சமாந்தரமாகச் செல்ல வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக் காட்டினார்.

இளைஞர்களை தொழில் முனைவோராக மாற்ற புதிய திட்டம்:

இளைஞர்களும் தொழில் முனைவோராக செயல்படும் திறன்களை வளர்த்து, தொழில் ஒன்றை தொடங்குவதற்கான ஆரம்ப மூலதனத்தை அவர்களுக்கு வழங்கி, தேசிய உற்பத்தியாளர்கள், தொழிலதிபர்கள் மற்றும் முயற்சியாண்மையாளர்களைப் வலுப்படுத்த வேண்டும். இளைஞர்களுக்கு அவர்களின் திறமையின் அடிப்படையில் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். இளைஞர்களை தொழில் முனைவோராக்கி முடிவெடுக்கும் உரிமையும் அபிவிருத்தி முன்னுரிமைகளை உருவாக்கும் உரிமையும் வழங்கப்படும். கிராமம் மற்றும் நகரத்தின் தேவைகளை இளைஞர்களே தீர்மானித்து செயற்படுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும். ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் இதற்கான ஏற்பாடுகள் செய்து தரப்படும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஆக்க பூர்வமாகச் சிந்தித்தால் முட்டை உற்பத்தியில் தன்னிறைவு அடையலாம்:

நமது நாடு முட்டையில் தன்னிறைவு அடையவில்லை. இதற்குத் தேவையான மூலப் பொருட்களுக்கு அதிக வரி விதிக்கப்படுவதே இதற்குக் காரணம். இதனால் முட்டையைக் கூட வெளி நாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. இதன் காரணமாக, மட்டுப்படுத்தப்பட்ட அந்நியச் செலாவணியைக் கூட இழக்க நேரிட்டுள்ளது. நாட்டில் முறையான முட்டை உற்பத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டு, முட்டைத் தொழிலுக்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டால், உள்நாட்டில் முட்டைகளின் தேவைப்பாட்டை நிவர்த்தி செய்யும் அதேவேளை, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பு உள்ளது. நாட்டில் ஆக்க பூர்வமான வேலைத் திட்டம் இல்லாததும், தேவையான வசதிகளுடன் தேசிய உற்பத்திக்கு முன்னுரிமை வழங்கப்படாமையே இதற்குக் காரணம். முட்டையில் தன்னிறைவு பெறுவது மட்டுமின்றி, குடிசைத் தொழிலை சிறு தொழிலாக மாற்றி, தொழில் முனைவோரை உருவாக்கி, முட்டை ஏற்றுமதி செய்யும் நாடாக மாறி, அந்த இலக்கை நோக்கிச் செல்ல வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஆக்க பூர்வமான தீர்வுகளே நாட்டுக்குத் தேவை:

கடற்கரையில் இருந்து 200 கடல் மைல் தொலைவு வரையிலான கடல் பரப்பு நாட்டுக்கு சொந்தமானது எனக் கூறப்பட்டாலும், அது முறையாகப் பயன்படுத்தப்படவில்லை. நாட்டில் நிதி இல்லையென்றால், கடல் சார் பொருளாதார முயற்சியாண்மைகளுக்கு (டீடரந நுஉழழெஅல) கூட்டுத் திட்டங்கள் மூலம் நிலையான அபிவிருத்தி இலக்குகளை எம்மால் அடையலாம். இவ்வாறான புதிய ஆக்க பூர்வமான தீர்வுகள் நாட்டுக்குத் தேவை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் குறிப்பிட்டுக் காட்டினார்.

## நிலையான...

(முன் பக்கத் தொடர்ச்சி)

மாற்றங்களை ஏற்படுத்தலாம் என்றும், மஹிந்த ராஜபக்ஷ ஆருடம் கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்ற போதிலும், தற்போதைய அரசாங்கத்தின் தலைவரும் அரச தலைவரும், அந்தக் கட்சியின் கொள்கையிலிருந்து வேறுபட்ட கொள்கைகளைப் பின்பற்றும் அரசியல் கட்சியின் தலைவரே எனவும், அவர் மேலும் சூளுரைத்துள்ளார்.

வரிச்சுமையைக் குறைப்பது தொடர்பான ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டே, முன்னாள் ஜனாதிபதி இவ்வாறு கருத்துக் கணிப்பைத் தெரிவித்துள்ளார்.






2022 அரச நாடக விழா அண்மையில் நடைபெற்ற போது கலைச் செல்வன் அப்துல் ரவுபிற்கு இலங்கையின் நாடகக் கலையின் வளர்ச்சிக்காக அரும் பணியாற்றியதற்காகவாழ்நாள் சாதனை விருது வழங்கி கவுரவிக்கப்பட்டார் .அதற்கான விருதினை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து பெறுவதனைப் படத்தில் காணலாம். அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவும் படத்தில் காணப்படுகிறார்.

# மலர்ந்துள்ள புது வருடத்துடன் புதிய பல விடயங்களை வாசகர்களுக்காய் சுமந்து வருகிறது

உதயம்

**14...**

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

அசையாத நம்பிக்கையையே இது எடுத்துக் காட்டுகிறது. அது மாத்திரமல்ல, அந்த நம்பிக்கைக்குப் பின்னணியில் அவரது உரைக்கு பாகிஸ்தான் மக்கள் பச்சைக் கொடி காட்டியிருப்பதும், அவர் பாகிஸ்தான் பிரதமராக இருந்த கால கட்டத்தில் மக்களுடன் எவ்வாறு நெறுங்கிப் பழகியுள்ளார் என்பதையும் துள்ளியமாக பறைசாட்டிக் கொண்டிருக்கிறது.

ஆனால், இத்தனைக்கும், பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் இந்த மக்கள் அழைப்புக்கு, பாகிஸ்தான் அரசு மௌனம் சாதித்துள்ளது. இம்ரான் கானின் அன்பான அழைப்புக்கு 4 1/2 கோடி மக்கள் ஆரவாரம், கரகோஷம் செய்திருக்கும் நிலையில், பாகிஸ்தான் அரசு மாத்திரம் ஆடிப்போய் மிரண்டு போயுள்ளது.

இம்ரான் கான் சிறையிலிருந்து மிகச்சிறப்பாக நான்கே நான்கு நிமிடங்கள் மாத்திரம் தான் பேசியிருக்கிறார். அவரது உரையின் சுருக்கத்தை, வாசகர்களுக்காக இங்கு தருகின்றோம்.

”எனது பாகிஸ்தானிய சகோதரர்களே...! அன்புள்ளங்களே...! இந்த வரலாறு முக்கியத்துவம் வாய்ந்த முயற்சிக்கு, நான் முதலில் எமது சமூக வலைத்தள குழுவினருக்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். சிலவேளை, நான் சிறையில் எவ்வாறு இருப்பது என நீங்கள் நினைக்கலாம். இன்று உண்மையான சுதந்திரத்திற்காக இருக்கும் எனது அதிர்ஷ்டம், மிகவும் பலம் வாய்ந்தது என்பதைக் கூற வேண்டும். உங்களுக்காக என்னுள் இருக்கும் தைரியம், நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போவதைத் தவிர, அதில் எந்தவிதமான தங்கு தடைகளும் ஏற்பட மாட்டாது.

எதிர்வரும் 2024 பெப்ரவரி மாதம் நடைபெறும் பொதுத்தேர்தலுக்கு நாம் பயப்படாமல் சளைக்காமல் முகங்கொடுக்க வேண்டும். ஆனால், ஆட்சியாளர்கள் என்னை நினைத்தும் பார்க்காத சந்தர்ப்பத்தில் சிறை பிடித்து வைத்திருக்கிறார்கள். ”நான் தேர்தலில் களமிறங்கக் கூடாது” என்பதுதான், அவர்களின் பிரதான நோக்கம். நான் சிறைவாசம் அனுபவித்து வந்தாலும், ஆட்சியாளர்களின் அந்தக் கனவு பலிக்காது. நான் எமது நாட்டு மக்களின் உண்மையான சுதந்திரத்திற்காக போராடுவேன். நான் இன்று சிறையில் இருந்தாலும், சில விநாடிகளுக்காவது உங்களுக்காக வேண்டி கதைத்துள்ளேன். நான் அன்று எவ்வாறு மக்களாகிய உங்களுடன் இருந்தேனோ, இன்றும் அதே நிலைப்பாட்டிலேயே உங்களுடன் இருக்கின்றேன் என்பதை, மகிழ்ச்சி பொங்கும் உள்ளத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பொய்களையும், அசாதாரண கொள்கைகளையும் நாம் தோற்கடிக்க வேண்டும். சத்தியமும், உண்மையான கொள்கைகளும், எம்மை வெற்றிப் பாதையை நோக்கி இட்டுச் செல்லும் என்பதே உண்மை.

(முன்னாள் ஜனாதிபதி இம்ரான் கானின் இந்த நான்கு நிமிட உரையை, அவர் சார்பில் முன்னிலையாகியுள்ள சட்டத்தரணி ஊடாக, உலகப் பிரசித்தி பெற்ற கணனி தொழில்நுட்ப நிறுவனமான அமெரிக்காவில் இயங்கும் ”இலெவன் லெப்ஸ்” ( நுடநஎநெ டுயடிள ) எனும் கணனி மயமாக்கல் திட்ட நிறுவனமே, மிகக் கச்சிதமாகவும் துள்ளியமாகவும் நேரலை ஒலி - ஒளி பரப்புக்கான ஒழுங்குகளைச் செய்திருந்தன. 4.5 மில்லியன் ஆதரவாளர்கள் பார்வையிட்டுள்ள இந்த உரை, Youtube மற்றும் Facebook ஆகியவற்றின் ஊடாக வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.)

# வித்தியாகீர்த்தி அமீர் அலியின் நிதரிசனமும் நிம்மதியும் கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு



**(எம்.பஹாத் ஜுனைட்)**

பிரபல கணிதப் பாட ஆசிரியர் வித்தியாகீர்த்தி,கவிச்சுடர் எம்.எம். அமீர் அலி எழுதிய ”நிதரிசனமும் நிம்மதியும்” எனும் கவிதை நூல் வெளியீட்டு விழா திங்கட்கிழமை(25) காத்தான்குடி மத்திய கல்லூரி பரீட் மண்டபத்தில் நடைபெற்றது.

விடிவெள்ளி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எம்.பி.எம்.பைறூஸ் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிஸ்மி நிறுவனத்தின் தவிசாளர் அஷ்ஷேய்க் எம்.பி.எம். பிர்தௌஸ் (நளீமி) நூலாசிரியர் அறிமுகத்தை வழங்கியதுடன் கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீட சிரேஷ்ட விரிவுரையாளர் சட்டத்தரணி எம்.ஏ.எம்.ஹக்கீம் நூல் அறிமுக உரை நிகழ்த்தினார்.

நூலாசிரியர் அமீர் அலி அவர்களிடம் கற்ற மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந் நிகழ்வில் கல்வியாளர்கள், ஊர் பிரமுகர்கள், மாணவர்கள், குடும்பத்தினர் என மண்டபம் நிறைந்த காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது .






www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 JANUARY 01
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# மலரும் 2024 புதுவருடம் மக்களுக்கு எப்படிப் பட்டதாக அமைய இருக்கின்றது?

2023 ஆம் ஆண்டு எப்படியோ உருண்டோடி 2024 ஆம் ஆண்டு மலருகின்றது. மலரும் புது வருடமான 2024 ஆம் ஆண்டு இலங்கை மக்களுக்கு எவ்வாறான அதிஷ்டம் மிக்கதாக அமைய இருக்கின்றது என்பதே அனைவரதும் ஒரே எதிர்பார்ப்பாக இருக்கின்றது. ஏற்கனவே 2022 ஆம் ஆண்டு மிகவும் துன்பங்கள் நிறைந்த ஆண்டாக விடைபெற்று மலர்ந்த 2023 ஆம் ஆண்டும் அதை விட நெருக்கடிகளும் துன்பங்களும் நிறைந்த வருடமாக இருந்ததோடு ஒருவாரு 12 மாதங்களும் உருண்டோடிவிட்டன.

இக்காலப் பகுதிக்குள் பொருளாதார நெருக்கடி, பொருட்கள் சேவைகளின் விலையேற்றம், வாழ்க்கைச் செலவு உயர்வு, ஆள்வீத வருமானத்தில் வீழ்ச்சி, சேமிப்பு பூச்சியமாதல், கடன் சுமை என்றெல்லாம் பிரச்சினைகளை மக்கள் தோள்மேல் சுமந்தவர்களாக துன்பங்களை அனுபவித்தனர். மலரும் 2024 ஆம் ஆண்டு புது வருடத்திலும் இதே துன்பங்களும் துயரங்களும் தான் மக்களுக்கான புது வருட பரிசாக காத்திருக்கின்றதா என்ற கேள்வி இலங்கை வாழ் மக்களது உள்ளங்களில் ஊசலாடிக் கொண்டிருக்கின்றன. .

அத்துடன் 2024 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் ஜனாதிபதித் தேர்தல் நடக்கலாம் என்பதை ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்கா திட்டவட்டமாக அறிவித்துள்ள நிலையில் அரசியல் கட்சிகள் இப்போதிருந்தே அதற்கான ஆயத்தங்களில் இறங்கி இருப்பதையும் அறிய முடிகின்றது. பிரதான எதிர்க்கட்சியான சமகி ஜனபலவேகய கட்சியின் ஜனாதிபதி அபேட்சகராக சஜித் பிரேமதாசா போட்டியிடுவார் என்பதில் சந்தேகம் இல்லை. கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் இருந்தே அவர் அதற்கேற்றவாறு பிரசார பணிகளை முன்னெடுத்து வருகின்றார்.

ஆனாலும் பொதுஜன பெரமுணவின் மஹிந்த ராஜபக்ஷ அணிக்குள் ஒருவிதமான குழப்ப நிலை ஏற்பட்டிருப்பதை அறிய முடிகின்றது. ஏற்கனவே அந்த கட்சி டளஸ் அணி என்றும் கோதாபய அணி என்றும், மஹிந்த அணி என்றும் மூன்று அணிகளாக பிளவு பட்டு இருக்கின்ற நிலையில் அதன் ஜனாதிபதி அபேட்சகராக தனவந்தரும் பிரபல தொழிலதிபருமான தம்மிக பேரோவை நியமிப்பதற்கு கட்சியின் சிலர் முயற்சிகளை மேற்கொண்ட போதும் கட்சிக்குள் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக  அவருக்கான வாய்ப்பு கைநழுவும் என்று அறிய முடிகின்றது.

ஏற்கனவே பொதுஜனபெரமுணவின் தேசிய மாநாட்டிற்கு இந்த தம்மிக பேரேரா பெரியளவு பணத்தை வாரி வழங்கி இருந்த நிலையில் அவருக்கு முன்வரிசையில் இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனாலும் அக்கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலர் அதன் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து தம்மிகவை ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்க வேண்டாம் என்று கோரியுள்ளனர். அதன் பின்னர் தேசிய அமைப்பாளர் பதவி பற்றி யோசித்தாலும் அந்த வாய்ப்பும் கிடைக்காது போகலாம்.

இதற்கிடையில் தம்மிக பெரேரா மைத்திபால சிரிசேனா தலைமையிலான ஸ்ரீ.ல.சு. கட்சி உறுப்பினர்கள் மற்றும் பொதுஜன பெரமுணவில் இருந்து பிரிந்து சென்றவர்களை சந்தித்து அவர்களது உதவிக்காக முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. நிலைமை இவ்வாறிருக்க தற்போதைய ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்காவை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக ஐ.தே.கட்சி தலைமையில் களம் இறக்கவும் அதற்காக எல்லா கட்சிகளதும் ஆதரவை பெற்றுக் கொடுக்க முன்னால் நிதி அமைச்சராக இருந்த ரவி கருணாநாயக்கா முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் செய்திகள் அடிபடுகின்றன.

இவ்வாறான ஒரு அரசியல் பின்னணியில் தான் புதிய வருடம் மலர இருக்கின்றது. எவ்வாறாயினும் பொதுமக்களது எதிர்பார்ப்பாக அமைவது தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு ஒரு ஸ்தீரமான தீர்வு கிடைக்க வேண்டும். அதன் மூலம் வாழ்க்கை சுமைகள் தளர வேண்டும். நாட்டில் கஷ்டங்கள் நீங்கி சுபீட்சம் மலர மலர வேண்டும் என்பதாகும். அதனால் மலரும் 2024 புது வருடம் இந்நாட்டின் முதுகெலும்பான பொதுமக்களது எதிர்பார்ப்புக்களை நிறைவேறச் செய்யும் ஆண்டாக மலர வேண்டும் என்பதே எமதும் எதிர்பார்ப்பாகும்.

# பாதாள கோஷ்டிகளின் கைவரிசைக்கு கைவிலங்கு


சுஐப் எம்.காசிம்



சட்டம் ஒழுங்கை சீர்செய்து ஒழுக்கமு ள்ள சமூகத்தை உருவாக்குவதில் அரசாங்கம் கவனம் செலுத்துவது வரவேற்புக்குரியது. இளைய தலை முறையினரை சவால்மிக்க உலகுக்கு தயார்படுத்துவற்கு இந்த சட்ட ஒழுங்கும், சமூக ஒழுக்கமும் அவசியம். ஆட்கடத்தல், அதிகாரத் துஷ்பிரயோகம் மற்றும் ஒப்பந்தக் கொலை என்பவற்றுக்கு சட்டச்சீர் குலைவுகளே காரணம். இதைக் குலைப்பதற்குப் பின்னாலுள்ள சக்திகள் வெளிச் சத்துக்கு வந்துள்ளன. இது, உலகையே உலுக்கி யுள்ளது. போதை வஸ்து மாபியாக் களின் பிடியில் சட்டம் சிக்கி விட்டதா? இவ்வாறு எண்ணுமள விலேயே நிலைமைகள் உள்ளன. நாளாந்தம், கைப் பற்றப்படும் கஞ்சா, அபின், சீஷ் மற்றும் கடலில் கைவிடப்பட்ட நிலையில் மிதக்கும் ஏஷ், கொகெய்ன் போன்ற போதைவ ஸ்துக்களின் விநியோகஸ்தர்கள் யார்? இவற்றின் வியாபாரத் தளமாக இலங்கை பயன்படுத்தப்படுகிறதா?

அரசியல் மற்றும் பாதுகாப்புத்துறை யினரின் ஒத்துழைப்புக்கள் இந்த வியாபாரத்தில் இருக்கிறதா? இந்தக் கோணங்களில் விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளது அரசாங்கம். பிரான்ஸ் மற்றும் டுபாயிலிருந்து இந்த வியாபாரமும் போதைக்கடத்த லும் இயக்கப்படுகிறது. பாதாள கோஷ்டியினரின் முக்கிய புள்ளிக ளை குறிவைக்கும் புலனாய்வு அதிகாரிகளைக் கூட கொல்லுமள வுக்கு, போதை மாபியாக்களின் பலம் நாட்டின் பல துறைகளுக்குள்ளும் புகுந்துள்ளது. தனிப்பட்ட ரீதியில் பழிவாங்கப்படும் ஆபத்தை ஏற்படு த்தி, புலனாய்வு அதிகாரிகளை பின்வாங்கச் செய்யும் யுக்திகளை, இந்த போதை மாபியாக்கள் பயன்ப டுத்துகின்றன. இதனால்தான், போதை ஒழிப்பு நடவடிக்கைகளில் புலனாய்வுப் பிரிவு பலவீனமடைவ தாகவும் மக்கள் சந்தேகிக்கின்றனர்.

ஏன், அரசாங்கத்துக்கும் இந்த சந்தேக ம் உள்ளது. இவ்வாறு சந்தேகத்திலு ள்ள அரசாங்கம்தான், விசேட இராணு வ நடவடிக்கையை முன்னெடுத்துள் ளது.

மாகந்துர மதுஷ், அங்கொடலொக்கா, பொடிலெஸ்ஸி மற்றும் கொஸ்கம சுஜி என்றெல்லாம் புனைப்பெயரில் பிரபல்யமாகியுள்ள இவர்களின் பூர்வீகத்தை புரிந்த பின்னர்தான் அரசாங்கம் இந்த "யுக்திய" இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

இந்நடவடிக்கையில், இதுவரை கைதானவர்கள், கைப்பற்றப்பட்டவைகள் ,பெறப்பட்டுள்ள தகவல்கள் அரசியல் வட்டாரத்தை கதி கலக்கியு ள்ளது. போதைக் குற்றச்சாட்டுக்களில் கைதாகி சிறையிலுள்ளவர்களையும், தொடர்ந்து தூண்டுமளவுக்கு இவர்களின் தொடர்பாடல்கள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

பாதாள கோஷ்டிகளின் பிரதான பொருளீட்டலாக இந்தப் போதை வியாபாரமுள்ளது.

கோடிக்கணக்கில் குவியும் இந்தச் செல்வங்களை பங்கு பிரிப்பதில் ஏற்பட்ட பிளவுகளால்தான், பல குழுக்கள் ஏற்பட்டு உள்ளக மோதல்கள் உண்டாகியுள்ளன. இரக சிய தகவல்கள் கசிந்துவிடுவதை பாதுகாக்க முந்திக் கொள்ளும் இந்தக் குழுக்கள்தான், தனித்தனி நபர்களை கொன்று வந்துள்ளன.

சில கொலைக ளை கண்டுகொள்ளாதிருக்க, உயர் அதிகாரிகளுக்கு கையூட்டுக்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

இத்தாலி, டுபாய் மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகளில், வலையமைப்புள்ள இந்தப் போதைக் கோஷ்டிகளைக் கையாள் வதிலுள்ள கடினங்களை கச்சிதமாக கையாளவே யுக்திய விசேட இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பாகியுள்ளன.

இளையோரின் எதிர்காலத்தை போதைக் கும்பலின் பிடியிலிருந்து விடுதலையாக்கும் அரசின் இத்திட்டம் பாகுபாடின்றி பாராட்டப்பட வேண்டும்.

பாராளுமன்றமே ஒன்றுகூடி தீர்மானித்த இவ்விடயம் வெற்றி பெற்று, சட்டம் ஒழுங்குள்ள சமூகம் உருவாக ஒவ்வொருவரது ஒத்துழைப்புக்களும் அவசியம்.

# உக்குவளை குரீவெல ஹமீதியா கல்லூரி மாணவத் தலைவர்களுக்கு சின்னம் அணிவிப்பு





(உக்குவளை ஜலீல்)

உக்குவளை குரீவெல ஹமீதியா கல்லூரி மாணவர் தலைவர்கள் மாணவ தலைவிகளுக்கு சின்னம் அணிவிக்கும் நிகழ்வு இக்கலாலூரியில் நடைபெற்றது.

இக்கல்லூரி அதிபர் எம்.அஸ்லம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பொலன்னருவை மஜிஸ்ட்ரேட் நீதவான் திருமதி பாயிஸ் சம்ருத் ஜஹான்  அதிதிகளாக மாகாண முஸ்லிம் பாடசாலைகளின் இணைப்பதிகாரி ஆர்.யூ.ரில்வான் உட்பட முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர் .

இப் பாடசாலை அதிபர் தலைமையிலான அபிவிருத்திக்குழுவினர் இந்நிகழ்வை ஏற்பாடுசெய்திருந்தனர்.

# தொழிலதிபர் நைஸர் காதர் காலமானார்

சின்மா ஹோல்டின் குருப் நிறுவனத்தின் தலைவரான அல்ஹாஜ் நைஸர் காதர், கபோத வெலிகமையைச் சேர்ந்த காலஞ்சென்ற அப்துல் காதர் ஹாஜியார்  ஆயிசா உம்மா ஹாஜியானி தம்பதியினரின் புதல்வரவார்.

இவர் சட்டத்தரணி கமர் ஹாஷிமின் மருமகனுமாவார்.

கடந்த சனிக்கிழமை ஜனாஸா கொழும்பு மாளிகாவத்தை முஸ்லிம் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

# பவள விழாவினை முன்னிட்டு சிறப்பு கௌரவிப்பு நிகழ்வு

கண்டி, தெல்தோட்டை எனசல்கொல்ல மத்திய கல்லூரி ஒன்றிணைவோம் - பலம்பெறுவோம் எனும் தொனிப்பொருளில் கடந்த 17ம் திகதி கல்லூரியின் பவள விழா வெகு கோலாகளமாக இடம்பெற்றது. கல்லூரியில் கடமைப்புரிந்த முன்னாள் அதிபர்கள், முன்னாள் ஆசிரிய ஆசிரியைகள், தெல்தோட்டை பகுதி மூத்த உலமாக்கள் மற்றும் மூத்த பழைய மாணவர்கள் இந்த நிகழ்வின் போது கௌரவிக்கப்பட்டனர். கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளை இதனை ஏற்பாடு செய்திருந்தது.

கல்லூரியின் முதல்வர் அல்ஹாஜ் எம்.ஜி. நயிமுல்லாஹ் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பிரபல தொழிலதிபர் கலாநிதி அல்ஹாஜ் எம்.ஸீ. பஹார்தீன் ஜே.பி. கலந்து சிறப்பித்தார். நிகழ்வின் கௌரவ அதிதிகளாக கொழும்பு, இப்ராஹிம் குழுமு நிறுவனங்களின் முகாமைத்துவப் பணிப்பாளர் அல்ஹாஜ் அல்ஹாஜ் அர்க்ஷாத் பாரூக் மற்றும் கண்டி பாரூக் பிரதர்ஸ் உரிமையாளர், பிரபல சமூக சேவையாளர் அல்ஹாஜ் ஜே.எம். பாரூக் ஜே.பி. ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வின் மிக முக்கியமான அம்சமாக நவீனமயப்படுத்தப்பட உள்ள அலுவலக கட்டிடத்துக்கான பெயர்ப்பலகை பிரபல தொழிலதிபர் கலாநிதி அல்ஹாஜ். எம்.ஸீ. பஹார்தீன் அவர்களினால் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டதுடன், புதிதாக நிர்மாணிக்கப்பட உள்ள மாணவர் விடுதிக்கான பெயர்ப்பலகை கொழும்பு இப்றாஹீம் என்டர் பிறைஸஸ் பிரைவெட் லிமிடெட் நிருவாகப் பணிப்பாளர் அல்ஹாஜ் அர்க்ஷாத் பாரூக் அவர்களினால் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது. இந்த இரு விடயங்களையும் அவர்கள் இருவரும் தமது சொந்த செலவில் கட்டி தருவதாக பொறுந்திக் கொண்டனர்.

அத்துடன் கல்லூரியின் அபிவிருத்தியினை நோக்காகக் கொண்டு கண்டி பாரூக் பிரதர்ஸ் உரிமையாளர், பிரபல சமூக சேவையாளர் அல்ஹாஜ் ஜே.எம். பாரூக் ஜே.பி. அவர்களினால் கல்லூரிக்கான பொது நிதியமொன்றும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த கௌரவிப்பு நிகழ்வின் போது 150க்கும் மேற்பட்ட கல்லூரியில் கடமைப்புரிந்த முன்னாள் அதிபர்கள், முன்னாள் ஆசிரிய ஆசிரியைகள் கலந்து கொண்டதுடன் ஏனையோர் தவிர்க்க முடியாத காரணத்தினால் வருகை தர முடியாது என அறிவித்தனர். அவர்களுக்கான கௌரவ பரிசில்களும் உரிய முறையில் அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கொழும்பு கிளையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பவள விழா நினைவு மலரும் வெளியிடப்பட்டதுடன் பல்வேறு சிறப்பு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

**தயாரிப்பு :-**
**பழைய மாணவர் சங்க**
**கொழும்புக் கிளை**





















இர்பான் இக்பால்




# பேசப்படாத நியாயங்கள் பழைய கேக்!

நீதியும் - நியாயமும் தூண்டப்படும் வரை மனிதனுக்குள் உறங்கியிருக்கும் உணர்வுகள். பெரும்பாலும் தனக்கொரு அநீதியிழைக்கப்படும் போதே மனிதன் நீதியை தேட ஆரம்பிக்கிறான். நியாயங்களைப் பேச விளைகிறான். அதுவரை, தான் சார்ந்த, தன் சமூகம் சார்ந்த அநியாயங்களை மறைப்பதற்கும் மறுப்பதற்கும் கூட அவன் தயங்குவதில்லை.

இலங்கையின் நீதிமன்றங்கள் வழக்குகளால் நிறைந்து வழிந்து கொண்டிருக்கிறது. அதிலும், குடும்ப வழக்குகள் ஏராளம். ஒவ்வொரு குடும்பத்துக்குள்ளும் ஆயிரமாயிரம் பிரச்சினைகள். அதில் திருமணம் முக்கிய பங்கு வகிக்கிறது. காலகாலமாக, இரு குடும்பங்களுக்கு மத்தியிலான பிணைப்பை உருவாக்கும் அல்லது பலப்படுத்தும் முக்கிய உறவுப் பாலமாக திருமணம் அமைந்து வந்தாலும், பல வேளைகளில் அதன் பின்னணியில் உருவாகும் உண்மையான சிக்கல்களுக்கு மௌனமே பதிலாக இருக்கும்.

எனவே, எந்தத்தரப்பிலிருந்து நியாயத்தைப் பெற்றுக் கொள்வதென்று தெரியாது நீதிமன்றங்களை நாட உந்தப்படுகிறது சமூகம். அதிலும் பல வழக்குகள் வருடக் கணக்கில் பேசப்பட்டுக் கொண்டேயிருப்பதால் நியாயங்கள் அத்தனை விரைவாக கிடைப்பதில்லை. இலங்கையில், சமூகங்களுக்கான தனித்துவ சட்டங்கள் இருப்பதால் ஓரளவு துரிதம் இருப்பதாகவே நம்பப் பட்டாலும், சமூக நீதிமன்றங்களில் மீறப்படும் நியாயங்களை மீண்டும் பொது நீதிமன்றத்தில் தேட வேண்டிய நிர்ப்பந்தமே காணப்படுகிறது.

சமூகம் எதிர் நோக்கும் முக்கிய சிக்கல்களுள் ஒன்று ஆண்களின் வரம்பு மீறிய 'பல தார' மோகம். தனது நடவடிக்கைகளால் கை விடப்படும் அப்பாவிப் பெண்களின் வாழ்வுரிமையைக் கூட மதிக்காத பொடு போக்குத்தனமான செயற்பாடுகளால் பாதிக்கப்பட்டுள்ள பெண்கள் ஏராளம். இதனை அடுக்கடுக்காகச் சொல்வதற்கு பல உதாரணங்கள் இருக்கின்றன. எனினும், இன்றைய தலைப்புக்கான பின்னணி பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணின் கதையைக் கொண்டது.

சில மாதங்களுக்கு முன், சட்டத்தரணியாகப் பணியாற்றும் என் நண்பட ஒருவரோடு உரையாடிக் கொண்டிருக்கையில், இருக்கும் வேலைப் பளுவுக்கு மத்தியில் இலவசமாக ஆஜராகும் சில வழக்குகளும் வந்து சேர்ந்து தலையிடியை உருவாக்குகிறது என்று ஆதங்கப்பட்டுக் கொண்டார். அதில் சிலவற்றை விளக்கிச் செல்கையில், ஒரு பெண்ணின் கதை எனது ஆவலத்தை இன்னும் ஆழமாக்கியது. குறித்த பெண்ணுடைய கணவன் ஆறு இடங்களில் ஆறு பெண்களை திருமணம் செய்து, குழந்தைகளும் பெற்றுக் கொண்டு பொறுப்பில்லாமல் திரியும் பின்னணி சார்ந்தது. அதிலும், இந்த மூத்த மனைவியை கைவிட்டுச் செல்வதற்கு ஏற்க முடியாத காரணங்களை முன் வைத்த நபருக்கு எதிராக சமூக நீதிமன்றம் தீர்ப்புமளித்து, மாதாந்த பராமரிப்பு செலவை வழங்க உத்தரவுமிட்டிருந்தது.

எனினும், சமூக நீதிமன்ற வரையறை அறிந்த நபர், இதனையும் மீறி ஐந்து வருடங்களாகவே பாதிக்கப்பட்ட பெண்ணை இன்னும் ஏழ்மையில் தள்ளி, எதுவித கொடுப்பனவையும் வழங்காது தலைமறைவாக வாழ்ந்து வந்துள்ளார். இப்போது, அவட இருப்பிடம் கண்டறியப்பட்டதால் மீண்டும் நீதிமன்றம் நாடியுள்ளார் பெண். இந்த ஒரு தடவை எல்லாம் சரியாக நடந்தால், அந்தப் பெண்ணுக்கு நீதி கிடைக்கும் என்பதே கதைச் சுருக்கம். இந்த வழக்கை கட்டாயம் நடாத்துங்கள் என்று நானும் கேட்டுக் கொண்டேன். என் தந்தையும் இதைத்தான் சொன்னாட என்று சொன்ன சட்டத்தரணி, வாக்குத் தவறாமல் வழக்குக்கு ஆஜராகினார்.

மிகத் திறமையாக வாதங்களை முன் வைத்த சட்டத்தரணி, பெண்ணுக்கான நீதியையும் பெற்றுக் கொடுத்தார். இதுவரை தரத் தவறிய பராமரிப்பு செலவினை முழுமையாக செலுத்தாவிடின், சிறைத்தண்டனை என்ற நீதிமன்ற எச்சரிப்புக்குப் பயந்த மனிதன், இணங்கிக் கொண்டான். மறு நாள், முதற் தொகுதி பணம் வந்தாக வேண்டும். மகிழ்ச்சியுடன் உணர்வுப் பெருக்கில் இருந்த நான்கு குழந்தைகளின் தாயான அப் பெண் அடுத்து செய்த காரியம், அவரது வலியின் உச்சத்தையும் நீதி பெற்ற உணடவுப் பெருக்கையும் எடுத்துக் காட்டியதாகவே எனக்குப் பட்டது.

வழக்கு முடிந்ததும் கையுமாக அருகில் உள்ள கடைகளில் தேடி, எப்படியோ ஒரு 'கேக்' வாங்கி வந்து விட்டார். நன்றி நவிலலாக அதனை சட்டத்தரணிக்கு வழங்கிய பெண்ணிடம், ஒரு வகையில் எனது நண்பரும் உங்களுக்காக நான் இன்று வழக்குக் வந்ததற்குக் காரணம், அவர் இங்கிலாந்தில் இருப்பதால் இப்போது நேர வித்தியாசம் இருக்கிறது. இருந்தாலும், ஒரு காணொளியை பதிவு செய்கிறேன், நன்றியைச் சொல்லி விடுங்கள் என்று கேட்டுக்கொள்ள, அப்பெண்ணும் அவ்வாறே தனக்குத் தெரிந்த வகையில் நேர்மையாக தனது நன்றி நவிலலை தெரிவித்திருந்தார்.

அன்றைய நாள். என்னோடு உரையாடும் போது, நண்பர் அந்தக் காணொளியையும் காட்டி, அத்தோடு அப்பெண் தந்திருந்த கேக்கினையும் காட்டினார். அப்படியே, இன்னும் திறக்காமல் இருக்க, ஏன் இன்னும் சாப்பிடவில்லையா? என வினவினேன். அதற்குப் பதிலளித்த என் நண்பர், சிரித்துக் கொண்டே, இல்லை அதனை சாப்பி முடியாது. ஏனெனில் அது காலாவதியாகி விட்டது என்று விளக்கினார்.

தனக்கு உதவி செய்தவர்களுக்கு நன்றி தெரிவிக்க, கையிலிருந்து சிறு தொகை பணத்தில் எங்காவது ஓடிச் சென்று தன்னால் முடிந்த கேக்கினை அப் பெண் கொண்டு வந்துள்ளார். இப்போது படுபாவி கடைக்காரனும், இந்த அபலைப் பெண்ணின் கையிலிருந்த பணத்துக்கு காலாவதியான கேக்கினைக் கொடுத்து விட்டான். கண்ணீர் மல்க நன்றி தெரிவித்த பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு இந்தக் கதை தெரியாது. ஏன் நண்பரும் ஆறுதல் சொல்லி அனுப்பி விட்டார்.

ஒரு நீதி பிறந்த தருணத்தில் இன்னொரு அநீதியும் பிறந்தது. ஆயினும், இப்போதைக்கு அப் பெண்ணுக்கு கிடைத்த நீதியை அனுபவிக்கட்டும் என்று காலாவதியான கேக்கினை அன்றைய நாள் நினைவுச் சின்னமாக பார்த்து விட்டு அமைதியடைய நேர்ந்தது. யாருக்கு யார் பொறுப்பு? என்ற கேள்வி இன்னும் தொக்கு நிற்கிறது.

# அஷ்-ஷூஹதா பாடசாலையும் மழை காலங்களில் அவர்களின் துயரமும்!






மேற்படி விடயமானது, சகோதரர் ராசிதீன் அவர்களினால் கேடபுபுயின் பிராந்திய தலைமைத்துவ சபையின் கவனத்திற்கு கடந்த வாரம் கொண்டுவரப்பட்டிருந்தது. இது தொடர்பாக சபை விரிவாக ஆராய்ந்தது. அதனை தொடர்ந்து Eng.அப்துல் ரஹ்மான் அவர்களும் சகோதரர்களான ராசிதீன்இ பர்சாத் மற்றும் ஷெ ரீப் உள்ளிட்ட குழுவினர் அந்த இடத்துக்கு சென்று நிலைமைகளை நேரில் பார்வையிட்டனர். பாடசாலையின் அதிபர், ஆசிரியர் மற்றும் அந்தப் பிரதேசத்தில் வசிக்கும் குடியிருப்பாளர்களும் அக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

தோணா-வடிகாலுக்கு முன்பாக அமைந்துள்ள இந்த பாடசாலை மழை காலங்களின் போது ஏற்படும் வெள்ளப்பெருக்கின் காரணமாக மிக மோசமாக பாதிக்கப்படுகிறது.

பாடசாலையின் வெளிப்புறம் மாத்திரமன்றி, பாடசாலை அதிபரின் அலுவலகம் உட்பட வகுப்பறைகளில் கூட வெள்ளம் நிறைந்து விடுகிறது என்றும் அதனால் அன்றாடம் தாம் படும் துயரங்கள் எவ்வாறானது என்பது பற்றியும் பாடசாலை அதிபரும் ஆசிரியரும் விபரித்தனர்.

அதேபோன்று பாடசாலைக்கு அருகில் வசிக்கும் குடியிருப்பாளர்கள் மழைக்காலங்களில் தாம் அனுபவிக்கும் துயரங்கள் பற்றியும் விவரித்தனர்.

இவற்றுக்கான தொழில்நுட்ப ரீதியான முதல் கட்ட தீர்வு எவ்வாறு அமைய முடியும் என்பதனை அப்துர் ரஹ்மான் அவர்கள் தெளிவுபடுத்தினார்.

இதனை இப்பாடசாலைக்கும், இப்பிரதேச மக்களுமுக்கான ஆரம்பகட்ட தீர்வாக எவ்வாறு அமுல்படுத்தலாம் என்பது பற்றியும் தீவிரமாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

# கலாசாரப் போட்டிகளில்
## வெற்றியீட்டிய மாணவர்கள் கௌரவிப்பு



(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய மாவடிப்பள்ளி கமு ஃகமுஃ அல்-அஸ்ரப் மஹா வித்தியாலயத்திலிருந்து 2023 தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு காரைதீவு பிரதேச சபையின் கலாசார பிரிவினரால் நடாத்தப்பட்ட 2023 தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழாவில் 12 மாணவர்களுக்கான வெற்றிச் சான்றிதழ்கள் மற்றும் சித்திரப் போட்டியில் திறமை காட்டி 2 ஆம் இடத்தினை சுவீகரித்துக் கொண்ட தரம்-7 மாணவி எம்.எப்.எப். ஹன்சா ஆகியோருக்கான விஷேட பரிசு வழங்கும் நிகழ்வும் அண்மையில் காரைதீவு விபுலானந்த கலாசார மண்டபத்தில் காரைதீவு பிரதேச சபை செயலாளர் ஏ.சுந்தரகுமார் தலைமையில் இடம் பெற்றது.

இவ்வெற்றிக்காக பாடசாலை ஆசிரியை திருமதி. மஸூறா சுகூர்தீன் அவர்களுக்கும் பங்கேற்று வெற்றியீட்டிய மாணவச் செல்வங்களுக்கும் பாடசாலை நிர்வாகத்தின் சார்பாக வாழ்த்தி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் வீ.எம். ஸம்ஸம் தலைமையில் பாடசாலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சாய்ந்தமருது சிங்கர் சோறூம் உரிமையாளர் எஸ்.எச். ஜிப்ரி கலந்துகொண்டு பாடசாலைக்கு தேவையான உதவிகளை பாடசாலை நிர்வாகத்தினரிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் பிரதி அதிபர் ஏ.எல். ரஜாப்தீன், உதவி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் மாணவர்கள் என பலரும் பங்கேற்றிருந்தனர்.

# இராணுவ சர்வாதிகாரம்

## கடும்போக்கு மதவாதம். இதுதான் பாகிஸ்தான்..!

எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் ரகசிய ஆவணங்களை கசியவிட்டதாக குற்றம் சாட்டப்பட்டு, 14 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் என்று தெரிகிறது. அதே நேரத்தில் அதிகாரத்தில் இருந்து வெளியேற்றப்பட்டதில் இருந்து ஏராளமான சட்ட வழக்குகளை எதிர்கொண்டுள்ள இம்ரான் கான், 2024ல் தேர்தலில் போட்டியிடுவதைத் தடுக்கும் முயற்சியாக இந்தக் குற்றச்சாட்டுகள் இருப்பதாகக் கூறுகிறார்கள் பாகிஸ்தானின் உள் அரசியலை நன்கு கவனித்து வரும் சர்வதேச பார்வையாளர்கள்.

இதற்கிடையில் அரசு ரகசியங்களை கசியவிட்ட குற்றச்சாட்டில் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானுக்கு அந்நாட்டு உச்ச நீதிமன்றம் ஜாமீன் வழங்கி உத்தரவிட்டுள்ளது. பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மீதான ஊழல் வழக்கு நிரூபணமானதை அடுத்து கடந்த ஆகஸ்ட் முதல் அவர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவர் மீது, அரசு ரகசியங்களை கசியவிட்ட குற்றச்சாட்டு உள்பட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் உள்ளன. அரசு ரகசியங்களை கசியவிட்ட குற்றச்சாட்டில் ஜாமீன் கோரி அவரது தரப்பில் அந்நாட்டு உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இதே வழக்கில் சிறையில் உள்ள முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் ஷா மெகமூத் குரோஷி சார்பிலும் ஜாமீன் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் நாட்டில் எப்போதும் அரசியல் ஸ்திரத்தன்மை என்பது கேள்விக்குறி என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் இந்தியா போன்ற நாடுகளில் உள்ள ஜனநாயக மாண்புகள் பாகிஸ்தான் அரசியலில் எப்போதும் இருந்ததாக நாம் அறிந்து கொள்ள முடியவில்லை. பாகிஸ்தான் நாட்டில் இராணுவத்தின் ஆட்சி தான் மிகவும் அதிகமான அதிகாரங்களை கையாண்டு வந்துள்ளது என்பதே கடந்த காலங்களில் ஏற்பட்டுள்ள வரலாறு என்பதை நாம் அறிவோம்..

இதன் விளைவாக பல இராணுவ நிர்வாகங்கள் (1958-69, 1969-71, 1977-88, மற்றும் 1999-2008) பாக்கிஸ்தானை அதன் வரலாற்றில் பாதி வரை ஆட்சி செய்தன.

பாகிஸ்தான் வரலாற்றில் இது வரை எந்தவொரு பிரதமரும் 5 ஆண்டுகள் ஆட்சியை நிறைவு செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டு உள்ள வரலாற்றை நாம் அறிந்து கொள்ளும் போதும் அந்த தேசத்தின் ஸ்திரத்தன்மை இல்லாத அரசியல் கள சூழலை நாம் முழுமையாக புரிந்து கொள்ள முடிகிறது என்பதே உண்மையாகும்.

1958 ஆம் ஆண்டு முதன்முதலில் பாகிஸ்தான் இராணுவ ஆட்சியின் கீழ் வந்தது. ஜனாதிபதி இஸ்கந்தர் மிர்சா அரசியலமைப்பை ரத்து செய்து இராணுவச் சட்டத்தை தலைமை இராணுவச் சட்ட நிர்வாகியாக ஜெனரல் அயூப் கானுடன் அறிவித்தார், சில வாரங்களுக்குப் பிறகு அயூப் கான் பாகிஸ்தானின் ஜனாதிபதியானார். இந்த முதல் இராணுவச் சட்டம் அதிகாரப்பூர்வமாக 44 மாதங்கள் நீடித்தது, ஆனால் ஜெனரல் அயூப் கான் 1969 இல் மட்டுமே பதவியை விட்டு வெளியேறினார் மற்றும் ஜெனரல் ஆகா முகமது யஹ்யா கானை அவரது வாரிசாக அறிவித்தார். கானைப் போலவே, ஜெனரல் யஹ்யா கானும் தலைமை இராணுவச் சட்ட நிர்வாகியாக இருந்தார். 1971 போரில் இந்தியாவிற்கு ஏற்பட்ட கடுமையான இழப்பிற்குப் பிறகு, ஜெனரல் அயூப் கானைப் போலல்லாமல், ஜெனரல் யஹ்யா கான் தனது வாரிசைத் தேர்ந்தெடுக்க முடியவில்லை, மேலும் நாட்டின் முதல் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற சுல்பிகார் அலி பூட்டோவைத் தனது வாரிசாகப் பெயரிடுவதைத் தவிர வேறு வழியில்லை. .

1977 ஆம் ஆண்டு ஜெனரல் ஜியா உல் ஹக் மற்றும் அவரது இராணுவம் பாராளுமன்றத்தை கலைத்து பூட்டோவை வீட்டுக்காவலில் வைத்தபோது இரண்டாவது இராணுவ சதி நடந்தது. ஜியா உல் ஹக் ஆரம்பத்தில் ஆட்சிக்கு வந்தார், இன்னும் பொருத்தமான முடிவுடன் ஒரு நியாயமான தேர்தலை உறுதியளித்தார், ஆனால் ஜியா வெளியேறும் எண்ணம் இல்லை என்பது விரைவில் உணரப்பட்டது. ஜெனரல் ஜியா உல் ஹக் இறுதியாக 1985 இல் முஹம்மது கான் ஜுனேஜோவை நாட்டின் புதிய பிரதமராக தேர்ந்தெடுத்த பிறகு ராஜினாமா செய்தார், அதே நேரத்தில் இராணுவச் சட்டத்தின் கீழ் பாகிஸ்தானின் இரண்டாவது அனுபவத்தையும் முடித்தார்.

மூன்றாவதும் கடைசியுமான இராணுவப் புரட்சி 2007 இல் நவாஸ் ஷெரீப்பிலிருந்து ஜெனரல் பர்வேஸ் முஷாரப் பொறுப்பேற்றபோது இடம்பெற்றது. கார்கிலில் இருந்து பாகிஸ்தான் படைகள் பின்வாங்கியதற்காக ஷெரீப் ஏற்கனவே நாட்டிலிருந்து பின்னடைவை எதிர்கொண்டார். இராணுவ சதிப்புரட்சியின் சாத்தியத்தை உணர்ந்த ஷெரீப், முஷாரப்பை அவரது கூட்டுப் படைத் தலைவர்கள் குழுவின் தலைவர் பதவியிலிருந்து மாற்ற முயன்றார், ஆனால் இராணுவமே முஷாரப்பிற்கு ஆதரவாக இருந்ததால் அது சாத்தியமில்லை, அதற்குப் பதிலாக, ஷெரீப்பை அவரது பதவியில் இருந்து நீக்கி, அவருக்குப் பதிலாக நியமிக்கப்பட்டார். முஷாரப். முஷாரப் இறுதியாக ராஜினாமா செய்தார் மற்றும் 2008 இல் பாகிஸ்தானின் கடைசி இராணுவ சதிக்கு முற்றுப்புள்ளி வைத்து புதிய அதிபராக ஆசிப் அலி சர்தாரி பதவியேற்றார்.



"சமீபத்திய நிகழ்வுகளின் படி பாகிஸ்தானின் அரசியலை அடுத்த சில வாரங்களில் என்ன நடக்கும் என்று சொல்வது மிகவும் கடினம் என்ற இடத்திற்கு கொண்டு வந்துள்ளது. பாகிஸ்தானின் பொருளாதாரம் மிகவும் மோசமாக நிலையில் உள்ளது, அதே நேரத்தில் பாகிஸ்தானின் அரசியலும் மோசமாக உள்ளது, பாகிஸ்தானில் சட்டம் ஒழுங்கு மோசமாக உள்ளது, இந்த நெருக்கடி வரும் நாட்களில் மேலும் அதிகரிக்கும் என்பதை மட்டுமே இந்த நேரத்தில் கணிக்க முடியும். அது எவ்வளவு தீவிரமாக இருக்குமோ அந்த அளவுக்குக் குழப்பமும் அமைதியின்மையும் நிலவும்" என்பதே தற்போதைய நிலையாக உள்ளது.

பாகிஸ்தான் காவல்துறை முற்றிலும் அரசியல் ரீதியாகச் செயல்படுகிறது. பாகிஸ்தானில் இதுபோன்ற வழக்குகளில் கைது செய்யும் மரபு இல்லை, மார்ச் 18 அன்று நீதிமன்றத்தில் ஆஜராவதாக இம்ரான் கான் உறுதியளித்திருக்கும்போது, லாகூரில் இதுபோன்ற நாடகத்தை மேடையேற்ற வேண்டிய அவசியமில்லை. இது எல்லாமே அரசியல்தான். ஸ்திரத்தன்மையற்ற அரசியல்." என்கிறார்கள் அரசியல் பார்வையாளர்கள்.

இரண்டு வெவ்வேறு வழக்குகளில் இம்ரான் கானுக்கு எதிராக இரண்டு வெவ்வேறு நீதிமன்றங்கள் ஜாமீனில் வெளிவர முடியாத பிடிவாரண்ட் பிறப்பித்துள்ளன. நீதிமன்ற விசாரணையின் போது அவர் ஆஜராகாததால் இந்த வாரண்ட் பிறப்பிக்கப்பட்டுள்ளது. தோஷாகானா வழக்கில், பிப்ரவரி 28 ஆம் தேதி இம்ரான் கான் மீது குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்படவிருந்தன, ஆனால் அவர் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் கைதாவதை தவிர்த்து வருகிறார். குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றஞ்சாட்டப்படும் போது நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டியது கட்டாயமாகும்.

இரண்டாவது வழக்கு கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் பேரணியின் போது பெண் நீதிபதியை மிரட்டியது தொடர்பானது. எனினும், இந்த வழக்கில் அவரது ஜாமீனில் வெளிவர முடியாத பிடிவாரண்ட் மார்ச் 16ஆம் தேதி வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இம்ரான் கான் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் ஆட்சியில் இருந்து அகற்றப்பட்டார். அதன்பிறகு அவர் மீது 70க்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவரது தரப்பு கூறுகிறது.

பாகிஸ்தான் வரலாற்றில் ஊழல் என்பது ஒரு அங்கமாக மாறியது நமக்கு எந்த ஒரு நிலையிலும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தவில்லை.கடந்த சில தசாப்தங்களாக நடைமுறையில் ஒவ்வொரு பாகிஸ்தானிய தலைவரும்– முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப், முன்னாள் ஜனாதிபதி சர்தாரி, முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ, முன்னாள் பிரதமர்கள் யூசுப் ரசா கிலானி மற்றும் ஷாஹித் அப்பாஸி, ஜெனரல் பர்வேஸ் முஷாரப் மற்றும் பலர் ஊழல் மற்றும் பிற வழக்குகளில் கடுமையான குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ளனர். , மற்றும் சிறைவாசம் அனுபவித்திருக்கலாம் அல்லது வெளிநாட்டிற்கு தப்பிச் சென்றிருக்கலாம் – கைது செய்வதைத் தவிர்ப்பதற்காக ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சவுதி அரேபியா மற்றும் இங்கிலாந்து நாட்டிற்கு அவர்கள் தப்பி சென்ற பல்வேறு நிகழ்வுகள் வரலாற்று பதிவுகளாக இருந்து வருகிறது.

இம்ரான் கான் உட்பட, ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு அரசாங்கமும் முந்தைய அரசாங்கத்தை எதாவது வகையில் குற்றம் சுமத்தி கைது செய்ய முயல்வதன் மூலம் தனது பதவிக்காலத்தை தொடர்வதை நாம் காண கூடியதாக இருக்கிறது. ஏப்ரல் 2022 இல் அவர் ஆட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டதிலிருந்து, இம்ரான்கானுக்கு எதிராக 100 க்கும் மேற்பட்ட வழக்குகளை பதிவு செய்யப்பட்டுள்ளது . இந்த வழக்கில் பல ஊழல், கிரிமினல் மற்றும் சில அவதூறு வழக்குகள் அடங்கும் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்

குறிப்பாக, அவர் வெளியேற்றப்பட்ட பின்னர், கடந்த ஆண்டு அவர் மீதான படுகொலை முயற்சிக்குப் பிறகு, கான் இராணுவம் மற்றும் ஐஎஸ்ஐ உளவுத்துறை அதிகாரிகளை நேரடியாக அகற்ற முயன்றதற்காக இராணுவத்தை மிகவும் கடுமையாக குற்றம் சாட்டினார். ஏனெனில் இந்தியா போன்ற நாடுகளில் அரசியல் ரீதியாக இராணுவம் அதிகாரங்கள் வழங்கப்பட்டு இருந்த போதிலும் அவை முழுமையாக மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உள்ளது. ஆனால், பாகிஸ்தான் வரலாற்றில் இராணுவ தலைமை நேரடியாக அதிகாரத்தில் தலையிட்டு அல்லது ஒரு கட்டத்தில் ஆட்சியை கைப்பற்றி விடுவதை நாம் காண முடிகிறது. இந்த நிலையில் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் கூட வீட்டு காவலில் அல்லது சிறையில் அடைக்கப்பட்ட பின்னர் தான் இராணுவ நீதிமன்றங்களில் வழக்கு தொடரப்படும் சூழல் காணப்படுகிறது.

அரசியல் குழப்பம்– இந்த ஆண்டு தேர்தல் நிச்சயமற்ற தன்மை பாகிஸ்தானில் காணப்படுகிறது.. அதேநேரத்தில் பாகிஸ்தான்

ராணுவத்திற்குள் மிகப் பெரிய அளவில் சிக்கல் காணப்படுகிறது . இந்த நிலையில் பாகிஸ்தான் ராணுவத்தின் ஒரு பகுதி பிளவுபடுவதற்கான சாத்தியக்கூறுகளை சுட்டிக் காட்டும் பல தகவல்கள் தென்படுவது அந்த நாட்டின் அரசியலில் மிகுந்த சிக்கல்களை பல்வேறு வடிவங்களில் ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. அப்படி பிளவுபட்ட சூழ்நிலையில் இம்ரான் கானுக்கு ஆதரவாக, ராணுவச் சங்கிலியில் ஒரு ஆதரவு தளம் ஏற்படலாம்.

பாகிஸ்தான் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி பல்வேறு வகையான சூழ்நிலையில் உருவானதுதான். குறிப்பாக கோவிட் மற்றும் உக்ரைன் போர் மற்றும் பல்வேறு உள்நாட்டு குழப்பங்கள் காரணமாக மிகுந்த நெருக்கடி அதிகரித்து மிகப் பெரிய அளவில் பணவீக்கத்திற்கு வழிவகுத்தது.

2023 ஏப்ரலில் அது 36.4மூ பொருளாதாரக் கடன் தோல்வியாக இருந்தது. இந்த நிலையில் ஐஆகு $ 6.5 பில்லியன் கடனைத் திருப்பிச் செலுத்தல் மிக முக்கியமான கட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் பாகிஸ்தான் பேச்சுவார்த்தைக்குட்படுத்தும் வரை, பாகிஸ்தான் அதன் அடுத்த கடனைத் திருப்பிச் செலுத்துவது கிட்டத்தட்ட உறுதியாகிவிட்டது– சுமார் கூ140பில்லியன் மொத்த கடனுடன், மொத்த பொதுக் கடன் $270bn க்கும் அதிகமாக உள்ளது, அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 80% அளவிற்கு உயர்ந்துள்ளது. இது பாகிஸ்தானின் வளர்ச்சிக்கு மிக பெரிய தடங்கலாக அமையும் என்று சர்வதேச பொருளாதார நிபுணர்களின் கருத்தாக இருக்கிறது

பாகிஸ்தான் தனது நட்பு நாடான சீனாவிற்கு கடன் $30 பில்லியன், மற்றும் இந்த ஆண்டு $700mn புதிய கடன் அளவில் உயரக்கூடும்.

ஐஎம்எஃப் ஒப்பந்தத்திற்காக பொருளாதார சீர்திருத்தங்கள் வலியுறுத்தப்படக்கூடாது என்று பாகிஸ்தான் விரும்புகிறது. இந்த சீர்திருத்தங்கள் – ஒற்றை சந்தை அடிப்படையிலான மாற்று விகிதம், மின் கட்டணம் மற்றும் எரிவாயு விலை அதிகரிப்பு மற்றும் வரி அதிகரிப்பு என்கிற அடிப்படையில் தொடரும்.

IMF நிதி மூலம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சில உறுதியான உதவிகளை வழங்க பாகிஸ்தான் விரும்புகிறது. பாகிஸ்தான் எதிர்கொண்டுள்ள நெருக்கடி இந்தக் கடன்கள், உதவிகள் மூலம் உறுதிமொழிகள் மூலம் தீர்க்கப்படும் என்று தோன்றவில்லை," என்று டான் பத்திரிகை எழுதியுள்ளது.

"ஜெனீவா மாநாட்டில் எட்டு பில்லியன் டாலர்களை திரட்ட ஷாபாஸ் ஷெரீப் இலக்கு நிர்ணயித்திருந்தார். ஆனால் அதை விட அதிகமாக தருவதாக உறுதியளிக்கப்பட்டுள்ளது. ஆனால் இது பிரச்னைக்கு தீர்வல்ல. பாகிஸ்தான் நீண்ட கால பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும்," என்றும் டான் நாளேட்டின் கட்டுரை தெளிவாக தெரிவித்துள்ளது.

இத்தனை சிக்கல் மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மை அற்ற நிலையில் சிக்கி தவிக்கும் நிலை பாகிஸ்தானுக்கு ஏற்பட்டதற்கு பல்வேறு மூல காரணங்கள் உண்டு என்பதை நாம் தெளிவாக புரிந்து கொள்ள முயற்சி செய்ய வேண்டும். மதம் மற்றும் ஆன்மீக சார்ந்த சிந்தனைகள் சார்ந்த இஸ்லாமிய நம்பிக்கை அடிப்படையில் உருவான தேசமாக பாகிஸ்தான் தோற்றுவிக்கப்பட்டது. மதம் என்பது தனிப்பட்ட நம்பிக்கை சார்ந்த விடயமாகும் . ஆனால், பாகிஸ்தான் வரலாற்றில் அதன் ஆட்சியாளர்கள் தங்களின் சுயநலம் சார்ந்து மத அடிப்படையிலான குழுக்களை உரமிட்டு வளர்த்து விட்டனர் . இந்த மத அடிப்படையிலான தீவிர போக்கை மேற்கொள்ளும் அடிப்படைவாதம் உருவாக பாகிஸ்தானின் உளவு அமைப்பு, அரசியல் தலைமை மற்றும் இராணுவ தலைமை என்று விரிவான தொடர்புகள் உள்ளதை நாம் மறுக்க முடியாது. இந்த அடிப்படையில் அவர்களை உருவாக்க அமெரிக்கா பெருந்தொகையான பணத்தை பாகிஸ்தானில் ஆட்சி செய்யும் எல்லா அரசுகளுக்கும் உதவி புரிந்தது. இதன் மூலம் இந்த பகுதியில் நிரந்தர குழப்பம் மற்றும் அமைதியின்மை ஏற்படுவதை அமெரிக்கா பல்வேறு வகையிலும் விரும்பியது.அதனைத் தொடர்ந்து பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானின் எல்லையோர பகுதிகளில் தீவிர குழுக்கள் தங்களின் சொர்க்கபுரியாகவே மாற்றி கொண்டார்கள். ஒரு நேரத்தில் எல்லை மீறிப்போன இவர்களின் ராஜ்யத்தை அடக்க முயவே அது எந்த விதத்திலும் சாத்தியம் இல்லாத சூழலை பாகிஸ்தானில் ஏற்படுத்தி விட்டது.

இதே போன்று உருவான ஜமாத் உத் தாவா, லஷ்கர் இ தொய்பா , தெஹ்ரீக்கே தாலிபான்கள் மற்றும் ஜிஹாதிய குழுக்கள் பல்வேறு வடிவங்களில் வன்முறைகள் மற்றும் குண்டு வெடிப்புகளை நடத்தி தங்களை நிலை நிறுத்திக் கொண்டு விட்டார்கள் என்பதே உண்மையாகும். இதற்கு உதாரணமாக ஹபீஸ் சையத், அசார் மசூத் போன்ற மத அமைப்புக்களின் தலைவர்கள் பாகிஸ்தானில் ஒரு குட்டி அரசாங்கத்தை நிறுவினார்கள். இது போன்ற எல்லையற்ற செயல்பாடுகளால் அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் பாகிஸ்தானை பிராந்திய தாதாவாக உருவாக்கி தங்களின் காரியங்களை சாமர்த்தியமாக சாதித்து கொண்டு விட்டார்கள் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்தும் இல்லை. அதாவது தெற்காசிய பிராந்தியத்தில் தீவிரவாதம் மற்றும் பதட்டம் எப்போதும் நிலைத்து இருக்கும் படி மிக கவனமாக அவர்கள் காய்களை நகர்த்தி வந்தனர்.இதன் மூலம் எல்லை தாண்டிய பயங்கரவாத குழுக்கள் இந்தியாவிற்குள் ஊடுருவல் செய்து வருவதாக இந்திய ராணுவ தலைமை தொடர்ந்து குற்றம் சாட்டி வந்துள்ளது.

உண்மையில் ஒரே நேரத்தில் சுதந்திரம் பெற்ற இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரண்டு தேசங்களின் வளர்ச்சியை உற்று நோக்கினால் இந்தியாவின் ஜனநாயக அரசியல், எல்லா மட்டங்களிலும் நிலைத்த ஜனநாயக தன்மை, பொருளாதார வளர்ச்சி, இராணுவ கட்டமைப்புகள், விண்வெளி ஆய்வுகள், உள்நாட்டு உற்பத்தி, அந்நிய முதலீடுகள், ஏற்றுமதி, இறக்குமதி, மருத்துவம், கல்வி, இராணுவ தளவாட உற்பத்தி என்று நவீன தொழில்நுட்ப டேங்கர்கள், விமானங்கள் என்று இந்தியாவின் வளர்ச்சியில் ஒரே முனையை கூட எட்ட முடியாத சூழ்நிலையில் இன்று பாகிஸ்தான் தத்தளிக்கும் நிலை காணப்படுகிறது. இந்தியா இன்று சர்வதேச பொருளாதாரத்தில் நான்காவது இடத்தை அடைந்துள்ளது.

ஆனால், பாகிஸ்தானின் வீழ்ச்சிக்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று ஜனநாயக அமைப்பில் இராணுவத்தின் தலையீடுகள், இரண்டாவதாக, கட்டுப்படுத்த முடியாத மத தீவிர கடும் போக்குவாதிகளின் வளர்ச்சி. இந்தியாவில் இராணுவம் அரசியல் அமைப்பில் தலையீடு செய்ய எந்தவொரு நிலையிலும் அனுமதிக்கப்படுவதில்லை. இந்தியாவில் ஜனநாயக அமைப்பின் செயல்பாடுகள் மிகவும் உறுதியான பாதுகாப்பு மற்றும் விவாதங்களை நாடாளுமன்றத்தில் முன்னெடுத்துச் செல்ல வாய்ப்பு உள்ளது. இந்தியாவில் நாடாளுமன்ற ஜனநாயகம் வலுப்பெற்று மக்கள் ஜனநாயக போக்கை மேற்கொண்டு நடக்க அனுமதிக்கப்படுகிறது.

பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் எல்லை மீறிப்போன ஊழல் குற்றச்சாட்டில் சிக்கி கொள்வதை நாம் காண கூடியதாக இருக்கிறது. அதேநேரத்தில் அரசுகள் தொடர்ந்து ஆட்சி செய்யும் அளவுக்கு அங்கே அனுமதி மறுக்கப்படுகிறது. அடிப்படைவாத தத்துவத்தை உள்வாங்கி விளிம்பு நிலை மக்களுக்கு கல்வி மறுக்கப்படுகிறது. பாகிஸ்தானை பொருத்தவரை முதலில் தவறான மத போதனைகள் நிறுத்தப்பட வேண்டும்.இதன் மூலம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் கல்வி வழங்கப்பட வேண்டும். அதே நேரத்தில் நாடாளுமன்ற ஜனநாயகம் வலுப்பெறும் வகையில் அந்த நாட்டின் அரசியல் அமைப்பில் தீவிர சட்ட திருத்தத்தை மேற்கொள்ள வேண்டும். பாகிஸ்தான் அரசியலில் ஸ்திரத்தன்மை உருவாக்கப்படும் நிலையில் இராணுவ நடவடிக்கைகளை இதிலிருந்து முழுமையாக அப்புறப்படுத்த கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில் வரும் காலங்களில் கடும் சாவால்கள் பாகிஸ்தான் மக்களுக்கு காத்திருக்கிறது.

அதனை அவர்கள் எதிர் கொண்டு வெற்றி பெறுவதை காலம் தான் முடிவு செய்யும் என்பதில் நமக்கு எந்தவொரு நிலையிலும் சந்தேகம் இல்லை என்பதே யாதார்த்தமான நிலையாக உள்ளது. அது வரையில் நாம் காத்திருக்க வேண்டும் என்பதே கசப்பான உண்மையாகும்.

# இலங்கை இரத்தினக்கல் கண்காட்சி 2024




(பீ.எம் முக்தார்)

கொவிட்-19 கொரோனா நோய்க்கு பின்னரான மிகப் பெரிய வணிக நிகழ்வுகளில் ஒன்றான ஜெம் சிறிலங்கா இரத்தினக்கல் கண்காட்சி 2024 ஜனவரி மாதம் 11 முதல் 13 வரை தென்னிலங்கையின் உல்லாச பயணபுரியாக திகழும் பெந்தொட்டையில் மூன்று நாட்கள் நடைபெறும். சீனங்கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த மாபெரும் கண்காட்சியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதம அதிதியாக கலந்து கொண்டு தொடக்கி வைப்பார் என சீனங்கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தக சங்க உப தலைவர் ரிஸ்வான் நயீம் தெரிவித்தார்.

அடுத்த வருடம் (2024) ஜனவரி 11,12,13 ஆகிய தினங்களில் பெந்தொட்ட ரம்மியமான கடற்கரை பிரதேசத்தில் அமைந்துள்ள சினமன் பீச் ஹோட்டலில் இடம் பெறவுள்ள இலங்கை இரத்தினக்கல் கண்காட்சி நிகழ்வின் முன்னோடியாக மிகவும் புகழ்பெற்ற உல்லாசப் பயணிகள் ஹோட்டல்களின் பொது முகாமையாளர்கள் கலந்து கொள்ளும் சிற்றுண்டியுடன் கூடிய சினேகபூர்வமான சந்திப் பொன்று மேற்படி சினமன் பீச் ஹோட்டல் மண்டபத்தில் நடைபெற்றது. பிரதேச ஊடகவியலாளர்கள் பலரும் அழைக்கப்பட்டிருந்த இந்நிகழ்வில் கண்காட்சி குறித்து தெளிவுபடுத்தும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது, சுமார் 40க்கும் மேற்பட்ட உல்லாசப் பயணிகள் ஹோட்டல்கள் இக் கண்காட்சியில் கலந்து கொள்ள அழைப்பு விடுத்திருக்கிறோம். மேலும் எமது ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், வெளிநாட்டு அமைச்சர், வர்த்தக அமைச்சர், இராஜாங்க அமைச்சர் மற்றும் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். அமெரிக்கா உள்ளிட்ட மேலைத் தேய நாட்டு வர்த்தகர்கள், சீனா உள்ளிட்ட கீழே மற்றும் அயலக நாட்டு முன்னணி வர்த்தகர்கள் பலரும் கண்காட்சியில் பங்களிப்புச் செய்யவுள்ளனர்.

இந்த கண்காட்சி நிகழ்வுகள் மூலம் இரத்தினக்கல் வர்த்தகமும் உல்லாசப் பயணிகள் ஹோட்டல்கள் பலவும் அபரிமிதமான பயன்பாடுகளை அடைந்து கொள்ள நிறைய வாய்ப்புகள் ஏற்படுகின்றன. குறிப்பாக எமது இளம் வாலிப வர்த்தகர்களை சர்வதேச வர்த்தக சந்தைக்கு அறிமுகப்படுத்த இதன் மூலம் களம் அமைத்துக் கொடுக்கவும் சந்தர்ப்பம் கிடைக்கிறது.

இலங்கையின் மாணிக்க வர்த்தகத்துடன் தொடர்புடைய மாணிக்க கல்வெட்டுதல், செப்பனிடல்,வடிவமைத்தல் உள்ளிட்ட கைத்தொழில் துறையை சர்வதேச முன்னணி வர்த்தகர்களுடன் தொடர்பையும் நெருக்கமான இணைப்பையும் வைத்துக் கொள்ளவும் இத்தகைய கண்காட்சிகள் வழி சமைக்கும் என்பதும் எமது எதிர்பார்ப்பாகவுள்ளது.

இந்நிகழ்வுக்கு தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையையும்-பேதுயு-, ஏற்றுமதி அபிவிருத்தி சபையும்-EDB- மற்றும் இலங்கை உல்லாச பயணிகள் அபிவிருத்தி செயல்பாடு நிறுவனம் போன்றவற்றின் முன்னணி அதிகாரிகள் பலரதும் பூரண ஒத்துலைப்புடன் இந்நிகழ்வு இடம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சீன நாட்டு பிரதிநிதிகளும் சினமன் ஹோட்டல் வலைப் பின்னூடான தொடர்புகளை வலுப்படுத்தி கொள்ளவும் மாணிக்க வர்த்தகத்தை மேம்படுத்திக் கொள்ளவும் இக்கண்காட்சி பல வழிகளிலும் உதவும் என்பதில் ஐயமில்லை.

மேலும் இக்கண்காட்சியின் போது எமது விலை மதிப்புள்ள இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்களை அறிமுகப்படுத்தும் வகையிலான மிகவும் கவர்ச்சிகரமான 2024 ஆம் ஆண்டு கலண்டர் ஒன்றும் மேற்படி நிகழ்வில் வெளியிடப்படவும் உள்ளது.

# தேசிய மட்ட சிங்கள மொழி பேச்சு போட்டியில் அஸ்லின் திறமைச் சான்றிதழ்






(எம்.எப்.றிபாஸ்)

மருதமுனை அல்மனார் தேசிய பாடசாலையின் தரம் எட்டில் கல்வி கற்கும் முஹம்மது ஹம்ஸா பாத்திமா அஸ்லின் தேசிய மட்ட இரண்டாம் மொழி சிங்கள பேச்சுப்போட்டியில் திறமைச் சான்றிதழ் பெற்று சாதனை படைத்துள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இரண்டிலும் இரண்டாம் மொழி சிங்கள பேச்சுப்போட்டியில் சிறந்த பேச்சாளராக தெரிவு செய்யப்பட்ட இவர் தேசியமட்டப்போட்டியில் கலந்து கொண்டு திறமைச் சான்றிதழ் பெற்றியிருப்பது ஒரு வரலாற்று பதிவாகும்.

தமிழ் மொழியிலான பாடசாலையில் கல்வி கற்றுக்கொண்டு ஒரு முஸ்லிம் மாணவியாகவிருந்து இவ்வாறான திறமைகளை வெளிக்காட்டியிருப்பது ஓர் அபரிமிதமான செயற்பாடாகும்.

தரம் எட்டில் கல்வி கற்கும் இவர் சிங்கள மொழி மீது உள்ள ஆர்வம் மற்றும் பற்று காரணமாக சிங்கள மொழியை சரளமாக பேசக்கூடிய ஒருவராக இம்மாணவி திகழ்கிறார்.

பாடசாலையில் நடைபெறும் பல்வேறு பேச்சுப்போட்டிகளில் பங்குபற்றி தமது திறமைகளை வெளிக்காட்டி வரும் இம்மாணவி கடந்த வெள்ளியன்று (22) அம்பாறை பண்டார நாயக்க மகளீர் மகா வித்தியாலயத்தின் காலை ஆராதனை நிகழ்வின் போது பாடசாலையின் நிருவாகத்தின் அழைப்பின் பேரில் விஷேட சிங்கள மொழியிலான சொற்பொழியொன்றை ஆற்றியிருந்தார். இச்சொற்பொழிவு தேசிய நல்லிணக்கத்தை வழியுருத்தும் வகையில் அமைந்திருந்ததுடன் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களது பாராட்டை பெற்றதும் சிறப்பம்சமாகும்.

காலை ஆராதனையின் போது கருத்து தெரிவித்த இப்பாடசாலையின் அதிபர் டப்ள்யு.ஈ. சிறியானி விஜயகோன் பிறப்பால் ஒரு முஸ்லிமாகவிருந்தும் சிங்களம் பேசாத ஒரு பாடசாலையில் கற்று இவ்வாறு இயல்பாக சிங்களவர்களை விடவும் திறமையாக சிங்களத்தை மொழிவது இம்மாணவியின் உள்ளார்ந்த திறமையை எடுத்துக்காட்டுகிறது.

தாய்நாட்டின் அற்புதங்கள் பற்றி அர்த்தமுள்ள உரையொன்றை மாணவி பாத்திமா அஸ்லின் நிகழ்த்தினார்.அதனை தொடர்ந்து அனைவரினதும் வேண்டுகோளுக்கினங்க ”குழந்தைகளே எதிர்கால தலைவர்கள்” என்ற தலைப்பில் மற்றுமொரு உரையை நிகழ்த்தி பலரது வாழ்த்துக்களையும் பெற்றார்.

பாடசாலையில் மாணவர் பாராளுமன்ற உறுப்பினராகவும் காணப்படும் இவர் தமிழ்தினப் போட்டி, ஆங்கில தினப்போட்டி, மற்றும் மீலாதுன் நபிவிழா போட்டிகளில் , மாகாண, மாவட்ட ரீதியில், பல்வேறு இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் கலந்து கொண்டு பல வெற்றிகளையும், சான்றிதழ்களையும் பெற்றுள்ள இம்மாணவியின் திறமை பாராட்டுக்குரியதாகும்.இவர் எதிர் காலத்தில் சிங்கள மொழி, ஆங்கில மொழிகளில் மிகவும் பாண்டித்தியம் உள்ள ஒருவராக திகழ்வார் என்பதில் ஐயமில்லை.

இவர் அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா மற்றும் கிராம நிலதாரியாக கடமையாற்றும் திருமதி எம்.ஐ.பாத்திமா ஷர்மதா ஆகியோரின் புதல்வி என்பது குறிப்பிடத்தக்கது.

# சுனாமியால் உயிரிழந்தவர்களுக்காக துஆ பிரார்த்தனை



சுனாமி பேரலையில் உயிரிழந்த மக்களுக்காக மாளிகைக்காடு அந் நூர் ஜும்மா பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையினர் 19 வது வருடமாகவும் ஏற்பாடு செய்த துஆ பிராத்தனையும், நினைவுரையும், குர்ஆன் தமாம் செய்யும் நிகழ்வும் சுனாமி தினமான (26) மாளிகைக்காடு அந் நூர் ஜும்ஆ பள்ளிவாசலில் நடைபெற்றது.


மாளிகைக்காடு அந் நூர் ஜும்மா பள்ளிவாசல் பிரதம நம்பிக்கையாளர் ஏ. பௌசர் அவர்களின் வழிகாட்டலில் உப தலைவர் ஏ.எம். ஜாஹீரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாளிகைக்காடு அந் நூர் ஜும்ஆபள்ளிவாசல் பிரதம இமாம் ஏ.எல்.எம். மின்ஹாஜ் (உஸ்மானி) தலைமையிலான உலமாக்கள், மதரஸா மாணவர்கள் கலந்து கொண்டு துஆ பிரார்த்தனை, நினைவுரை, குர்ஆன் தமாம் செய்யும் நிகழ்வு ஆகியவற்றை மேற்கொண்டனர்.

மாளிகைக்காடு அந் நூர் ஜும்ஆ பள்ளிவாசல் உப செயலாளர் யூ.எல்.என் ஹுதா நெறிப்படுத்திய இந்நிகழ்வில் உலமாக்கள், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீசன், காரைதீவு பிரதேச செயலாளர் எஸ். ஜெகராஜன், காரைதீவு பிரதேச சபை செயலாளர் ஏ.சுந்தரகுமார், கல்முனை சாஹிரா தேசிய பாடசாலை ஓய்வுபெற்ற அதிபர் சட்டத்தரணி எம். சி.ஆதம்பாவா, மாளிகைக்காடு கிழக்கு கிராம நிலதாரி ஏ.எம். நஜீம் உட்பட கல்விமான்கள், மதரஸத்துல் இர்ஸாதிய்யா மாணவர்கள், மாளிகைக்காடு அந் நூர் ஜு/ம்மா பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை செயலாளர் எப்.எம். ரௌபி, பொருளாளர் ஏ.எல்.எம். றிபாஸ், ஆலோசகர் ஐ. இஸ்திகார் உட்பட நம்பிக்கையாளர்கள், பொது அமைப்புக்களின் பிரதானிகள், ஊர் பிரமுகர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்ட மாளிகைக்காடு பிரதேசத்தில் இருந்து மதரஸத்துல் இர்ஸாதிய்யா மற்றும் கமு/கமு/ அல்-ஹுசைன் வித்தியாலய மாணவர்கள் அடங்களாக 204 பேர் கடந்த சுனாமி பேரலையில் காலமானார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஷம்ஸ் 97 அமைப்பினால் மையவாடி சிரமதானம்





மருதமுனை ஷம்ஸ் 97“ சமூக சேவைகள் அமைப்பினால் ”மருதமுனை மையவாடி சிரமதானமும்சுனாமியால் உயிர் நீத்த உறவுகளுக்கான துஆப் பிரார்த்தனையும்” மையவாடி முன்றலில் செவ்வாய்க்கிழமை(26) இடம் பெற்றது.

நிகழ்வானதுஅமைப்பின் தலைவர் ஐ. குமாயூன் தலைமையில் நடைபெற்றது. இதன் போது துஆப் பிரார்த்தனையை மௌலவி என்.எம். அப்ரித் (ஸஹ்வி) நிகழ்த்தினார். இந்நிகழ்வில் அமைப்பின் அங்கத்தவர்கள், ஏனைய சமூக சேவைகள் அமைப்பின் பிரதிநிதிகள், ஊர்நலன் விரும்பிகள் கல்வியியலாளர்கள் உலமாக்கள் மற்றும் இளைஞர் அணியினர் என பலர் கலந்து கொண்டு பங்களிப்பை வழங்கினார்கள்.

# தட்டம்மையை தடுக்க ஏப்ரல் முதல் ஜூலை வரை பிறந்த குழந்தைகளுக்கு தடுப்பூசி

(ஐ. ஏ. காதிர் கான்)

அதிகரித்து வரும் உலகளாவிய தட்டம்மை அச்சுறுத்தலை எதிர் கொள்ளும் வகையில், 2023 ஏப்ரல் 7 ஆம் திகதிக்கும், ஜூலை 5 ஆம் திகதிக்கும் இடையில் பிறந்த குழந்தைகளின் பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்களை இலக்காகக் கொண்டு இலங்கை சுகாதார மேம்பாட்டுப் பணியகம், முக்கியமான ஒரு அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, குருநாகல், கண்டி, கல்முனை மற்றும் யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்கள் அதிக ஆபத்துள்ள பிரதேசங்களாகக் காணப்படுவதால், இந்த அவசர நிலை குறிப்பாக வலியுறுத்தப்படுவதாக, பணியகம் குறிப்பிட்டுள்ளது.

இதன்பிரகாரம், எதிர்வரும் 2024 ஜனவரி 6 ஆம் திகதிக்குள் 6 மாதங்கள் முதல் 9 மாதங்கள் வரையிலான குழந்தைகள், கூடுதல் தட்டம்மை தடுப்பூசி இடத் தகுதியுடையவர்கள் என, சுகாதார மேம்பாட்டுப் பணியகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நடவடிக்கை, அடையாளம் காணப்பட்ட ஆபத்தில் உள்ள பகுதிகளில், அதிக தொற்று நோய்க்கு எதிராக நோய் எதிர்ப்புச் சக்தியை வலுப்படுத்துவதை நோக்காகக் கொண்டுள்ளது என்றும் பணியகம் தெரிவித்துள்ளது.

தட்டம்மை தடுப்பூசி இடும் நடவடிக்கைகளை, ஜனவரி 6 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை, அருகிலுள்ள தடுப்பூசி மையங்களுக்குச் சென்று, பெற்றோர்கள் தமது குழந்தைகளுக்கு இத்தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதை உறுதிசெய்து கொள்ளுமாறும், இலங்கை சுகாதார மேம்பாட்டுப் பணியகம், அனைத்து பெற்றோர்களிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# சட்டத்தரணி தொழில் பொன் விழா பாராட்டு





(எம்.எஸ்.எம்.முன்தஸிர்)

பாணந்துறை சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர் சிரேஷ்ட சட்டத்தரணி தம்சிரி பொன்சேகா சட்டத்தரணி தொழில் துறையில் ஐந்தாண்டுகள் நிறைவு செய்துள்ளார். இதனை முன்னிட்டு பாணந்துறை சட்டத்தரணிகள் சங்க தலைவர் முன்னாள் அமைச்சர் அஜித் பெரேரா தலைமையில் பொன் விழா பாராட்டு நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சட்டத்தரணிகள் சங்க பணிமனையில் பொன்விழா கொண்டாடும் சட்டத்தரணியின் உருவப்படம் ஒன்று சங்க தலைவரினால் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பெருமளவிலான சட்டத்தரணிகள் கலந்துகொண்டனர்.

# யாழ். முஸ்லிம் சமூக ஜோதி விருது 2023







முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான ஆர்.எம்.இமாம், சமூக மேன்மைக்காக முன்னின்று உழைத்த முன்னாள் பிரதி கல்வி பணிப்பாளரும் சமூகப்பற்றுள்ள கல்வியியலாளருமான எம்.எஸ்.ஏ.எம். முஹ்தார், இலக்கியவாதியும் சிறந்த ஆசிரியரும் வானொலி கலைஞருமான ஏ.ஸி.நஜுமுத்தீன் ஆகிய மூவரினதும் வீடுகளுக்கு சென்று அவர்களது சேவைகளை பாராட்டி அகில இலங்கை வை.எம். எம்.ஏ. பேரவையின் முன்னாள் தேசிய தலைவர் எம்.எஸ். றஹீம் ஜே.பி. அவர்கள் பொன்னாடை அணிவித்து விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதை படத்தில் காணலாம். யாழ் முஸ்லிம் சமூக ஊடகம் நிர்வாகி கலாபூஷணம் பரீட் இக்பால் அவர்களின் ஏற்பாட்டில் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் முன்னாள் தேசிய தலைவர் எம்.எஸ். றஹீமின் அனுசரணையில் இடம்பெற்றது.

# காதி பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(எம்.எஸ்.எம்.முன்தஸிர்)

நீதிச் சேவை ஆணைக்குழுவினால் நாட்டின் போறா சமூகம் உள்ளிட்ட எட்டு காதி நீதிமன்ற அதிகாரப் பிரிவுகளுக்கு காதி பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

ஹொரண, அக்குறண, கொழும்பு வடககு, கொழும்பு தெற்கு, யாழ்ப்பாணம், கிண்ணியா, மாஹோ காதி நீதிமன்ற பிரிவுகள் மற்றும் இலங்கை போறா சமூகத்துக்கு மேற்படி விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

இந்த வெற்றிடங்கள் தொடர்பான விபரங்கள் நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் கடந்த எட்டாம் திகதி அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

இம்மாதம் முப்பதாம் திகதி விண்ணப்ப முடிவுத் திகதியாகும்.







எட்டியாந்தோட்டை, பகல கராகொடை அல் ஹிக்மா குர்ஆன் மத்ரஸாவின் வருடாந்த பரிசளிப்பு விழா மற்றும் ஏழாவது சான்றிதழ் வழங்கும் நிகழ்வுகள் என்பன அண்மையில் நடைபெற்றன. மேற்படி நிகழ்வில் விஷேட அதிதியாகக் கலந்து சிறப்பித்த அஷ்ஷெய்க் ஹஸன் பாரிஸ் மதனி அவர்கள் உரையாற்றுவதையும், வெளியேறிச்செல்லும் மாணவர்களால் மத்ரஸாவிற்கான தளபாடம் மற்றும் ஆசிரியர் அஷ் ஷெய்க் ஏ.கே. முஹம்மத் அவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படுவதையும், நிருவாகத்தினரால் விசேட அதிதிக்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்படுவதையும், கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# பிரதேச மட்ட திருமண நல்லிணக்க சபை அமைத்தலும் சேவை வழங்குனர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வும்




(பாறுக் ஷிஹான்)

பிரதேச மட்ட திருமண நல்லிணக்க சபை அமைத்தலும் சேவை வழங்குனர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வும் கல்முனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இன்று நடைபெற்றது.

குறித்த நிகழ்வினை மனித எழுச்சி அமைப்பும் (HEO) அம்பாறை மாவட்ட செயலகமும் ஒருங்கிணைந்து மேற்கொண்டுள்ளன.

இதன் போது நிர்வாக உத்தியோகத்தர் ஏ.சி.எம்.பளீல் நெறிப்படுத்தலில் கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி, சிரேஸ்ட சட்டத்தரணியும் கல்முனை காதி நீதிபதியுமான எம்.டபிள்யு.ஆர்.ஏ.எப். இன் சட்ட ஆலோசகருமான எப். எம்.ஏ அன்சார் மௌலானா, நில உரிமைக்கான மக்கள் கூட்டமைப்பின் இணைப்பாளரும் (PARL) மனித எழுச்சி அமைப்பின் (HEO) இயக்குநருமான கே. நிஹால் அஹமட் ,மேலதிக மாவட்ட பதிவாளர் எம்.டி.எம் கலீல், கலந்துகொண்டனர்.

மேலும் குடும்ப வாழ்வில் பாதிப்புற்று நலிவுறும் பெண்கள் குழந்தைகளைப் பாதுகாத்தலுக்கும், காதி நீதிமன்றங்களின் கண்ணியத்தைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கான சமூகத்தின் பொறுப்புணர்வை அதிகரிக்கும் திட்டம் குறித்து இங்கு வளவாளராக கலந்து கொண்ட அஷ்ஷெய்க் கலாநிதி றவூப் ஸெய்ன் குறிப்பிட்டார்.

குறித்த செயலமர்வில் பிரதேச திருமண பதிவாளர்கள், உலமாக்கள், பெண்கள் சிறுவர்கள் சார்ந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள், தன்னார்வ தொண்டு நிறுவன பொறுப்பாளர்கள் ,சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

# பெண் யுவதிகளுக்கான டிஜிட்டல் தொழில்நுட்ப விருத்தி திறன் பயிற்சிப் பட்டறை






(எம்.பஹ்த் ஜுனைட்)

காத்தான்குடி ஆய்வுக்கு மேம்பாட்டுக்குமான இஸ்லாமிய மகளிர் ஒன்றியம்( IWARE) இளைஞர் யுவதிகளுக்கான பல்வேறு வலுவூட்டல் வேலை திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. அந்த வகையில் யுவதிகளின் பாதுகாப்பான வலைத்தள பாவனையை உறுதி செய்வது தோடு டிஜிட்டல் தொழில்நுட்ப அறிவு விருத்தியை ஏற்படுத்தும் நோக்குடன் ஆறுநாள் பாட நெறி ஒன்றினை வடிவமைத்து நடாத்தி வருகின்றது.

இச்செயமர்வின் மூன்றாம் நாள் நிகழ்வு சனிக்கிழமை (16) ஒன்றியத்தின் தலைவி திருமதி அனீஸா பிர்தௌஸ் தலைமையில், காத்தான்குடி பீச்வே ஹோட்டலில் இடம்பெற்றது.

டிஜிட்டல் தொழில்நுட்பத்தினூடான பிரச்சார திட்டமிடல் முகாமைத்துவம், வீடியோ எடிட்டிங் , டிஜிட்டல் தொழில்நுட்பத்தினூடாக கதை கூறல், சமூக வலைத்தளங்களை பாவிக்கும்போது கவனிக்க வேண்டிய நுட்பங்கள் போன்ற விடயங்கள் யுவதிகளுக்கு கற்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# காணிகள் இல்லாததால் எதிர்கொள்ளும் மனித அவலம்



ஏ.எச்.ஏ. ஹுஸைன்

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கும் காணி நிருவாகப் பாரபட்சம் தொடர். 7

அரச காணிகளோ தனியார் காணிகளோ இல்லாததால் மாவட்டத்தில் மனித அவலங்களை எதிர்கொள்ளும் இடங்களாக முஸ்லிம் பிரதேச செயலகப் பிரிவுகள் மாறியுள்ளன. அதிலும் குறிப்பாக ஏறாவூர் நகர பிரதேச செயலகப் பிரிவு பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்கள் வாழும் பிரதேச செயலகப் பிரிவுகள் வளப்பகிர்வு சம அளவில் வழங்கப்படாமல் இன ரீதியில் பாரபட்சமாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இதனால் முஸ்லிம் சமூகம் குறுகிய வட்டத்திற்குள் அடக்கியாளப்படுகிறார்கள்.

மாவட்ட நிருவாகம் மேற்கொள்ளும் நிலப்பங்கீடு தொடர்பான பாரபட்சங்களால் இந்த நிலைமை தோன்றியுள்ளதாக முஸ்லிம் பிரதேச மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது.

இந்த விடயங்களைப்பற்றி சமூக நிறுவனங்களை உள்ளடக்கிய பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனங்கள் கரிசனையுடன் செயற்பட்டு மக்களின் அவலங்கள் குறித்து அரச உயர்மட்ட நிருவாகங்களுக்கு பல முறை தெரியப்படுத்தியுள்ளதாக ஏறாவூர் பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் ஏ.சி.எம். ஷயீட் தெரிவிக்கிறார்.

பொது நிருவாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சராகவிருந்த கரு ஜயசூரியவுக்கும் காணி அமைச்சர். எம். கே.ஏ.டி.எஸ். குணவர்தன,, கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஒஸ்டின் பெர்னாண்டோ, மட்டக்களப்பு மாவட்டச் செயலாளராகக் கடமையாற்றிய சறோனிதேவி சார்ள்ஸ் ஆகியோருக்கு ஏறாவூர் மக்களின் சார்பில் காணி நிருவாக பாரபட்சத்தை நீக்குமாறு வேண்டுகோள் விடுத்து ஏறாவூர் பள்ளி வாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் 2015.03.30 அன்று அறிக்கை சமர்ப்பித்திருந்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் பின்வரும் விடயங்களை தாம் வலியுறுத்தி இருந்ததாக அவர் குறிப்பிட்டார்.

மக்களுக்கு குடியிருக்க காணிகள் இல்லாத மனித அவலத்தை ஏறாவூர் நகர பிரதேச செயலகப் பிரிவு எதிர்கொண்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலேயே அரச காணிகள் இல்லாத ஒரு பிரதேச செயலகப் பிரிவாக நன்கு திட்டமிடப்பட்டு தந்திரமான முறையில் இப்பிரதேச செலயகப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டம் சுமார் 2633.10 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பைக் கொண்டிருக்கின்றபோதும் ஏறாவூர் நகர பிரதேச செயலக பிரிவு 3.745 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பை அதாவது மாவட்டத்தில் 0.14 சத வீத நிலப்பரப்பை மட்டுமே கொண்டுள்ளது.

காணி விநியோகத்தில் முஸ்லிம்கள் பாகுபாடு காட்டப்பட்டுள்ளனர். ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகப்பிரிவில் முஸ்லிம்கள் வாழ்ந்து வந்த பூர்வீகக் காணிகள் கபளீகரம் செய்யப்பட்டுள்ளன. முஸ்லிம்கள் குடியேறுவதைத் தடுப்பதற்காக ஏறாவூர்ப்பற்று பிரதேச சபையினால் ஏறாவூரை அண்டியுள்ள பிரதேசங்கள் குப்பைகளைக் கொட்டுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

இதன் மூலம் சுற்றுசூழல் மாசுபாட்டிற்கு வழி வகுத்து தமிழர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையில் முரண்பாடுகளை உருவாக்க, பிரதேச செயலாளர் முனைகிறார்.

நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னரும், ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளரும் அதே பிரிவைச் சேர்ந்த காணி உத்தியோகத்தர்களும் முஸ்லிம்களுக்கு எதிராக பாகுபாடு காட்டி தமது அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்து வருகின்றனர்.

ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் தனது இனவாத மனப்பான்மைக்காக, எல். எல்.ஆர்.சி (கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு) பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தத் தயங்குவதை அவதானிக்க முடிகின்றது. முஸ்லிம்களின் காணிப் பிரச்சினைகளில் அவர் அலட்சியமாக இருப்பதைப் பார்க்கும்போது மனவருத்தம் ஏற்படுகிறது.

ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் ஏறாவூரை அண்டியுள்ள ஏறாவூர் முஸ்லிம்களுக்குச் சேர வேண்டிய காணிகளை நியாயமான முறையில் மக்களுக்கு பகிர்ந்தளிக்குமாறும் நாம் வேண்டுகோள் விடுக்கின்றோம். அப்பொழுதுதான் இப்பிரதேசத்தில் பின்னடைந்துள்ள கல்வி, சுகாதாரம் உட்பட பிற உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த முடியும்.

2011ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட எல்லை சீர்திருத்தங்களுக்கான முன்மொழிவுகளுக்கு இணங்க புதிய பிரதேச செயலகப் பிரிவு, மாவட்டத்தின் அனைத்து அரசியல்வாதிகளாலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதனடிப்படையில் ஏறாவூர் நகர பிரதேச செயலகத்தினால் காணி நிருவாகத்தை மேற்கொள்ள முடியாதிருக்கும் 5 கிராம அலுவலர் பிரிவுகள் உட்பட 25 கிராம அலுவலர் பிரிவுகளுடன் புதிய, விஸ்தரிக்கப்பட்ட ஏறாவூர் நகர பிரதேச செயலகப் பிரிவைப் பிரகடனம் செய்ய வேண்டும்.

ஏறாவூரில் ஓரளவு நிலப்பரப்பைக் கொண்டுள்ள ஐந்து முஸ்லிம் கிராம அலுவலர் பிரிவுகள் காணி நிர்வாக பணிகளுக்காக மட்டும் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இது முஸ்லிம்களை அடக்குமுறைக்குட்படுத்தும் திட்டமிட்ட சதியாகும்.

இதனால் இந்த வறிய கிராம மக்கள் பாரிய இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர்.

கடந்த 30 வருட கொடூர யுத்தத்தில் பாதிக்கப்பட்ட ஏறாவூர் பிரதேச முஸ்லிம்கள் தமது காணிகளையும் சொத்துக்களையும் மாத்திரமல்ல தமது அன்புக்குரியவர்களைக் கூட இழந்துள்ளனர். வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் இந்த மக்கள் இனவாத நிருவாக சதித் திட்டங்கள் மூலம் வஞ்சிக்கப்பட்டுள்ளனர்" என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இன ரீதியிலான பிரிப்புகளும் வன்செயல் பாதிப்புக்களும் ஏறாவூர்வாழ் முஸ்லிம்களில் 90 சதவீதமானோர் விவசாயிகள். இவர்களுக்குச் சொந்தமான சுமார் 43.23 சதுர கிலோ மீற்றர் (10678 ஏக்கர்) பரப்பளவிலான நெற்காணிகள் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் காணப்படுகிறது.

ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் 1981ஆம் ஆண்டு தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் குடிசன மதிப்பீட்டின்படி உறுகாமம் (றூகம்) பெரிய புல்லுமலை, பங்குடாவெளி, ஈரலக்குளம், கித்துள், மரப்பாலம், வேப்பவெட்டுவான், கொடுவாமடு, கோப்பாவெளி, சித்தாண்டி, மாவடிவேம்பு, வந்தாறுமூலை, கொம்மாதுறை, செங்கலடி போன்ற கிராமங்களில் சுமார் 2000 குடும்பங்களைச் சேர்ந்த முஸ்லிம்கள் வாழ்ந்து வந்திருக்கின்றார்கள்.

அது தவிர மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள உன்னிச்சை, பாவற்கொடிச்சேனை போன்ற கிராமங்களிலும் முஸ்லிம்கள் வாழ்ந்துள்ளார்கள்.

1985ஆம் ஆண்டைத் தொடர்ந்து ஏற்பட்ட இனக்கலவரங்களின் நிமித்தம் இவர்கள் தமது பூர்வீக இடங்களை விட்டும் விரட்டியடிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்நேரத்தில் சுமார் 35000 இற்கு மேற்பட்ட கால்நடைகளும் அவர்களிடமிருந்து அபகரிக்கப்பட்டுள்ளன.

தமது பூர்வீக வாழ்விடங்களையும் வாழ்வாதாரத்துக்கான விவசாயக் காணிகளையும் மற்றுமுள்ள அனைத்து உடமைகளையும் விட்டுவிட்டு அகதிகளாக இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் ஏறாவூர் நகர பிரதேச செயலகப் பிரிவிலும் பொலொன்னறுவை பதுளை மொனறாகலை அம்பாறை மாவட்டங்கள் உள்ளிட்ட நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் அகதிகளாக வசித்து வருகின்றார்கள்.

இவர்கள் முன்னர் பூர்வீகமாக வாழ்ந்து வந்த ஏறாவூர்ப் பற்று பிரதேச செயலகப் பிரிவிலுள்ள அவர்களது பூர்வீக வாழ்விடங்கள் கபளீகரம் செய்யப்பட்டுள்ளன.

### ஏறாவூர் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்:

தற்போது எறாவூர் நகர பிரதேச செயலகப் பிரிவிற்குள் குறுகிய நிலப்பரப்பில் மக்கள் செறிந்து வாழ்ந்து வருவதால் திண்ம திரவக்கழிவகற்றலுக்கான இடவசதி இல்லை.

அதனால் சுகாதாரம், குடிநீர் இருப்பிடம் போன்ற பிரச்சினைகளை மக்கள் எதிர்நோக்கி வருகின்றார்கள்.

இப்பிரதேசத்தில் சனத்தொகை விருத்திக்கேற்ப காணி இல்லாமல் இருப்பதே பாரிய பிரச்சினையாகும்.

அடுத்துவரும் ஒரு சில வருடங்களில் குடியிருக்க நிலம் இல்லாத மனித அவலம் ஒன்று இங்கு உருவாகலாம் என்று அஞ்சப்படுகின்றது.

ஏறாவூரைச் சூழ அமைந்துள்ள "ஏறாவூர்ப்பற்று" பிரதேச செயலகம், மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் சுமார் ஒரு சதவீதத்தைக் கொண்டுள்ளது. இது மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் 24.08 சத வீதமாகும்.

ஆனால் முஸ்லிம்களுக்கென பிரித்துக் கொடுக்கப்பட்ட ஏறாவூர் நகர பிரதேச செயலகமோ வெறும் 3.745 சதுர கிலோலமீற்றரைக் கொண்டுள்ளமையானது இங்கு நடக்கும் இன பாரபட்சத்தையும் பெரியதொரு மனித அவலத்தையும் பறைசாற்றுகிறது.

கூடுதலான விலை கொடுத்தும் ஒரு துண்டு நிலம் வாங்க முடியாத சூழ்நிலை ஏறாவூரில் உள்ளது.



இப்பகுதியிலுள்ள நீர் வடிந்தோடக்கூடிய வடிகான்கள் தற்பொழுது குடியிருப்பு நிலங்களாக மாற்றப்பட்டு வருவதனால் மழை காலங்களில் நீர் வடிந்தோடாமல் தேங்கி நிற்கிறது.

இதனால் சுகாதார சீர்கேடுகளையும் வருடாவருட வெள்ள அபாயத்தையும் மக்கள் எதிர்நோக்கி வருகிறார்கள்.

மாடு அறுக்கும் தொழுவம்கூட மக்கள் வாழும் குடியிருப்புக்களுக்கு மிக அருகிலேயே அமைந்துள்ளதாலும் மக்கள் மிகவும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

மரணிப்பவர்களை அடக்கம் செய்ய ஏறாவூர் நகர பிரதேசத்தில் மிகவும் பழமைவாய்ந்த, குறுகிய நிலப்பரப்புள்ள இரண்டு அடக்கஸ்தலங்களே இன்றுவரை காணப்படுகின்றன.

மழை காலங்களில் அடக்கஸ்தலங்களைப் பயன்படுத்தமுடியாத நிலை உள்ளது. இதுமட்டுமன்றி அடக்கஸ்தலங்களில் இடவசதி இல்லாததால் மாற்றொழுங்கு செய்வதற்குக் கூட ஏறாவூர் நகர நிருவாகத்தால் இயலவில்லை.

பொதுச் சந்தை அமைப்பதற்கு அரச காணித்துண்டொன்று இல்லாத நிலையில் பள்ளிவாசல்களுககுச் சொந்தமான காணிகளை குத்தகை அடிப்படையில் பெற்றே பொதுச்சந்தை தொகுதி ஒன்றுக்கான கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு அதுவும் முடிவுறாத நிலையில் பல வருடங்களாக பாழடைந்து காணப்படுகின்றது.

பிரதான வீதி உட்பட முக்கியமான உள்ளக வீதிகளை அகலமாக்குவதற்கு முடியாமலுள்ளது. காரணம் அதனால் அநேக குடும்பங்களின் வீடுகளும் வியாபாரஸ்தலங்களும் முழுமையாக இடித்தழிக்க வேண்டிய நிலையுள்ளது.

பாதிக்கப்படுபவர்களுக்கு மாற்றொழுங்கு செய்து வீடுகளையும் வியாபார ஸ்தலங்களையும் நிர்மாணித்துக் கொள்ள வசதியாக ஏறாவூரில் அரச காணிகளோ தனியார் காணிகளோ இல்லை.

இதனால் பலருக்கு எதிர்காலம் குறித்த அச்சம் ஏற்பட்டுள்ளது.

அகில இலங்கை ரீதியில் பல போட்டி நிகழ்ச்சிகளில் சாதனைகளைப் படைத்த விளையாட்டு வீரர்கள் இப்பிரதேசத்தில் இருந்தபோதிலும் அவர்கள் தங்களது திறமைகளை மேலும் வளர்த்துக் கொள்வதற்கு ஏற்ற வகையில் சிறந்த விளையாட்டு மைதானம் ஏறாவூரில் இல்லை.

திறமையான வீரர்களின் பயிற்சிக்காக சகல வசதிகளையும் உள்ளடக்கிய விளையாட்டு மைதானத்தை அமைப்பதற்கு காணிகள் இல்லாதது விளையாட்டு வீரர்களின் எதிர்காலத்தைப் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளது.

ஏறாவூர் நகர பிரதேச செயலகப் பிரிவில் ஒரு துண்டு நிலம் கூட இல்லாத காரணத்தினால் எந்த வகையான தொழில் நிலையங்களையோ, தொழிற்சாலைகளையோ, தொழிற்பயிற்சிக் கூடங்களையோ அமைக்க முடியவில்லை.

ஆகவே ஏறாவூர் நகர பிரதேச செயலகம் தொடர்பில் 1998ஆம் ஆண்டு வெளியான வர்த்தமானி அறிவித்தலை மறுசீரமைத்து புதிய எல்லைகளை வரையறை செய்வது அவசியமானதொன்றாக இருக்கின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தமிழ் மக்கள் வாழும் பிரதேச செயலகப் பிரிவுகளில் குடித்தொகை பரந்து வாழ வசதிகள் இருப்பதுபோன்று ஏறாவூர் நகர பிரதேச செயலகப் பிரிவிலும் குடித்தொகையினர் ஓரிடத்தில் செறிந்து வாழ்வதைத் தவிர்ப்பதற்காகவும் பல் சமூகங்களையும் உள்ளடக்கும் வகையிலும் எல்லைகளை மீள் பரிசீலனை செய்து ஏறாவூர் நகர பிரதேச செயலகப் பிரிவை விஸ்தரிக்க வேண்டும்.

ஏறாவூர் நகர பிரதேச செயலகத்திற்காக பிரேரிக்கப்படும் விஸ்தரிக்கப்பட்ட எல்லைகள்:

வடக்கு: வங்காள விரிகுடா கடலில் தளவாய் கிராம சேவகர் பிரிவின் மேற்கு எல்லையில் தொடங்கி சத்துருக்கொண்டான் எல்லை வரையிலான 08 கிலோ மீற்றர் சவுக்கடி கடல் எல்லை.

கிழக்கு: சத்துருக்கொண்டான் கடல் எல்லையில் ஆரம்பித்து அதன் கிழக்கெல்லை வழியாக அதாவது மட்டக்களப்பு மாநகரசபை எல்லை வழியாக மட்டக்களப்பு வாவி வரையிலான எல்லை.

தெற்கு: மட்டக்களப்பு வாவியில் மட்டக்களப்பு மாநகரசபை எல்லை தொடக்கம் ஏறாவூர்-5 கிராம சேவகர் பிரிவின் மேற்கெல்லையாக உள்ள தாமரைக்குளம் வரையான 03 கிலோ மீற்றர் எல்லை.

மேற்கு: ஏறாவூர்-5 கிராம சேவகர் பிரிவின் மேற்கு எல்லை வழியாக தாமரைக் குளத்தினை ஊடறுத்து ஏறாவூர் நகர சபையில் மேற்கெல்லை வழியாகச் சென்று தளவாய், ஐயங்கேணி கிராம சேவகர் பிரிவுகளின் மேற்கு எல்லையூடாக சவக்கடி கடல் வரை.

இந்த முன்மொழிவு செயலுருப்பெறுகின்றபோது புதிய ஏறாவூர் நகர பிரதேச செயலகப் பிரிவின் நிலப்பரப்பு 19.45 சதுர கிலோ மீற்றராக அமையும்.

இவ்வாறு நிலப்பிரச்சினைக்கு தீர்க்கமான ஒரு முடிவு கிட்டுமாயின் ஏறாவூர் நகர பிரதேச முஸ்லிம்கள் எதிர்கொண்டு வருகின்ற பெரும்பாலான பிரச்சினைகள் சுலபமாகத் தீர்ந்து விடும் என்று ஏறாவூர் பிரதேச மக்களின் சார்பில் ஏறாவூர் பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் கடைசியாக 2021ஆம் ஆண்டிலும் சமர்ப்பித்துள்ள முன்மொழிவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

(மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கும் காணி நிருவாகப் பாரபட்சம் தொடர்.. வரும் வாரமும் வரும்)

# முஸ்லிம் மாணவர்களுக்கு, இந்தமுறை A/L பரீட்சையிலாவது தீர்வு கிடைக்குமா?

- அஷ்ஷெய்க்
ஐ.எல்.தில்ஷாத் முஹம்மத் (கபூரி)

எதிர்வரும் நாட்களில் இலங்கையில் பாடசாலை மட்டத்தில் நடைபெறும் பரீட்சைகளில் மிக முக்கியமான இறுதிப் பரீட்சையாகிய க.பொ.த உயர்தரப் பரீட்சைகள் நாடளாவிய ரீதியில் நடைபெற இருக்கின்றன. முதலில் அனைத்து பரீட்சாத்திகளுக்கும் நல்வாழ்த்துக்களையும், சிறந்த பெருபேருகளையும் பெற வேண்டுமெனவும் பிரார்த்தித்து எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பரீட்சை என்ற பெயர் பொதுவாகவே ஓர் அச்சத்தை பரீட்சாத்திகளிடத்து ஏற்படுத்துவது இயல்பானது தான். இயல்பான இந்த அச்சத்தையும் தாண்டிய ஒரு இக்கட்டான நிலைக்கு முஸ்லிம் மாணவ மாணவிகள் ஆளாக்கப்படுவதை கடந்த காலங்களில் அறிய முடிந்தது.

பரீட்சைக்கு தோற்றும் முஸ்லிம் மாணவிகளுக்கு மானசீக உளைச்சல்களைக் கொடுத்து அவர்கள் பரீட்சைக்கு சரியான முறையில் முகம்கொடுக்க முடியாத நிலைமைகளை ஏற்படுத்திய சந்தர்ப்பங்கள் ஏராளம்.

பாடசாலையில் இருந்து பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் பாடசாலை சீருடையிலே தோற்ற வேண்டுமென்பது சட்டமாகும். பர்தா, கவுன், நீண்ட கால்சட்டை அணிவதற்கு அரசு முஸ்லிம் மாணவிகளுக்கு அனுமதியளித்துள்ளது. இந்த ஒழுங்கையே சகல பரீட்சைகளின் போதும் முஸ்லிம் மாணவிகள் பின்பற்றுகின்றனர்.

இதற்கு கல்வியமைச்சோ, பரீட்சைகள் திணைக்களமோ எந்த தடையையும், எந்த சந்தர்ப்பத்திலும் விதித்ததில்லை. எனினும் காழ்ப்புணர்வு கொண்ட சிலர் பரீட்சை மண்டபங்களிலும், பரீட்சைக்கு தோற்றிக் கொண்டிருக்கும் போதும் முஸ்லிம் மாணவர்கள் மீது சட்டத்திற்கு புறம்பான முறையில் செயல்பட்டு மாணவர்ளை சங்கடத்திற்குட்படுத்தி அவர்கள் உற்சாகத்தோடு பரீட்சை எழுத முடியாத நிலையினை தோற்றுவிக்கின்றனர்.

இவ்வாரான செயல்பாடுகள் பரீட்சை காலங்களில் பேசப்பட்டு, முஸ்லிம் மாணவர்களுக்கு அரசு வழங்கியுள்ள உரிமைகள் மீளப்பெற்றுக் கொடுக்கப்பட்டாலும், அடுத்தடுத்து வருகின்ற காலங்களில் மீண்டும் மீண்டும் இதே விடயம் விஸ்வரூபம் எடுப்பதன் நோக்கம் தான் என்னவென்று புரிந்துகொள்ள முடியவில்லை.

முஸ்லிம் மாணவன் ஒருவருக்கு தனது பல்கலைக்கழக பரீட்சையின் போது தாடியுடன் பரீட்சைக்கு தோற்ற முடியாதெனக்கூறி தடைவிதிக்கவே, சட்டத்தை நாடிய அந்த மாணவனுக்கு தாடியுடன் பரீட்சைக்கு தோற்ற முடியும் எனவும், அவருக்கு விதிக்கப்பட்ட தடை அடிப்படை உரிமை மீரல் எனவும் இலங்கையின் சட்டத்துரை தீர்பளித்திருந்ததை அனைவரும் நன்கறிவோம்.

இவ்வாரான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்பொன்றை வழங்கிய பேனாவின் மை காயும் முன்னரே கிழக்கு பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் ஸஹ்றி தாடிவைத்துள்ளார் என்ற ஒரே காரணத்திற்காக தனது இறுதியாண்டு பரீட்சைக்கு தோற்றமுடியாத நிலை ஏற்பட்டதையும், பின்னர் சட்டத்தை நாடியதையும் நாம் அறிவோம்.

இது சட்டத்தில் இருக்கிற பிரச்சினையா அல்லது குறித்த ஒரு சிலர் அதிகாரத்தில் இருக்கின்ற பிரச்சினையா என்பதை புரிந்து கொள்ள முடியாதிருக்கிறது. சன்முகா வித்தியாலயத்தில் முஸ்லிம் ஆசிரியைக்கு ஹிஜாப் அணிந்து பாடசாலை வரமுடியாது என்ற தடையை பாடசாலை நிர்வாகம் மேற்கொண்டு அதற்கெதிராகவும் நீதிமன்றம் சென்று உரிமையை வென்றெடுத்தாலும் எதிர்காலங்களில் இந்த பிரச்சினை வெவ்வேரு வடிவங்களில் வராது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லாத நிலையே தென்படுகிறது.

எதிர்வரும் உயர்தரப் பரீட்சை விடயத்தில் முஸ்லிம் தலைமைகளின் பொறுப்பும் கடமையும்.

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்றிருக்க வேண்டிய க.பொ.த உயர்தரப் பரீட்சைகள் இம்மாதம் கடைசி வாரம் முதல் ஆரம்பமாக உள்ளன. எனவே கடந்த காலங்களில் பரீட்சை மண்டபங்களிலும், பரீட்சை நடந்து கொண்டிருக்கும் போதும் நடந்த கசப்பான சம்பவங்கள் நடைபெறாதிருக்க தேவையான ஏற்பாடுகளும், அறிவுருத்தல்களும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர்களுக்கும் பரீட்சாத்திகளுக்கும் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

பரீட்சைக்கு மாணவர்கள் சென்றதன் பின்னர் மாணவர்கள் உளரீதியாக பாதிக்கப்பட்டு பின்னர் அதுகுறித்து அறிக்கை விடுவதிலும், சட்டத்தை நாடுவதிலும் அர்த்தமேதுமில்லை. கல்வியமைச்சும், பரீட்சைகள் திணைக்களமும் பரீட்சாத்திகள் தொடர்பில் குறிப்பாக முஸ்லிம் மாணவிகளது சீருடை விடயத்தில் வழங்கியுள்ள அனுமதியினை அனைத்து பரீட்சை நிலையங்களிலும் மும்மொழிகளிலும் பார்வைக்கு இடவேண்டும். இது குறித்து மாணவ சமூக அறிவூட்டப்படவும் வேண்டும்.

பரீட்சை மண்டப நுளைவாயிலில் வைத்து முஸ்லிம் மாணவிகளது பர்தா களையப்பட்ட சந்தர்பங்களும் நிகழ்ந்துள்ளன. இதற்கு முன்னரும் இவ்வாரான செயல்பாடுகள் நடைபெற்றிருப்பதை அறிந்த சிலர் கைவசம் முந்தானைகளை எடுத்துவந்திருந்ததாகவும், பர்தாவிற்கு பகரமாக மாற்றுவழி இல்லாத மாணவிகள் பர்தா இன்றி குற்ற உணர்வோடும், கடுமையான கூச்ச உணர்வோடும் பரீட்சைக்கு தோற்றியதாகவும் தெரிவித்த சம்பங்களும் பதிவாகியுள்ளன.

முஸ்லிம் மாணவிகள் பர்தா அணியும் போது தங்களது காதுகள் வெளியில் தெரிகின்ற மாதிரி அணிய வேண்டும் என்று கட்டாயப்படுத்திய ஒரு சில சம்பங்களும் கடந்த காலங்களில் பதிவாகின. இது குறித்தும் தெளிவான வழிகாட்டல்கள் பரீட்சாத்திகளுக்கும், பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கும் வழங்கப்படுவதும் கட்டாயமாகும்.

மேலும் உயர்தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு சில இலெக்ரொனிக் கருவிகள் பாவிப்பதற்கான அனுமதியளிக்கப்பட்டுள்ளது. அவற்றிற்கும் சில விதிவிலக்குகள் இருக்கின்றன. எனவே பரீட்சையின் போது ஏற்படும் அஸௌகரிகங்களை தவிர்க்கும் பொருட்டு அவைகுறித்த தெளிவான வழிகாட்டல்களை மாணவர்கள் தங்களது பாடசாலையினூடகவோ அல்லது பிராந்திய கல்வியமைச்சினூடாக பெற்றுக் கொள்வதே சாலச் சிறந்ததாகும்.

அதேபோன்று இன்றைய காலம் ஸ்மார்ட் யுகமாக மாறியிருப்பதால், ஸ்மார்ட் கைக்கடிகாரம், ஸ்மார்ட் போன், ஸ்மார்ட் பேனா, ஸ்மார்ட் உபகரணங்கள் என ஏராளமான ஸ்மார்ட் பொருட்கள் பாவனையில் இருப்பதால் இவை நிச்சியமாக பரீட்சைகளின் போது தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்கலாம். எனவே மாணவர்கள் இவற்றை தவிர்ந்து கொள்வதற்கும் அறிவுருத்தப்பட வேண்டும்.

பர்தா அணிந்து பரீட்சைக்கு தோற்றிக் கொண்டிருக்கும் போது பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்த சில அதிகாரிகள் அச்சுருத்தும் தொணியில் பர்தா அணிந்து பரீட்சை எழுத முடியாது எனக் கூறியதோடு நிற்காமல் அம்மாணவிகளை தனது கையடக்க தொலைபேசில் படம்பிடித்துக் கொண்டதோடு அவர்களது பரீட்சை சுட்டெண்ணையும் குறித்த சென்றதாக பம்பலபிடிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்படட்ட சம்பவங்களும் இருக்கின்றன.

இங்கு முறைப்பாடு செய்வது, அல்லது சம்பவத்தின் பின்னர் முஸ்லிம் மாணவிகளுக்கான உரிமையைப் பெற்றுக் கொடுப்பது என்பதையும் தாண்டி, பரீட்சாத்திகள் மானசீக ரீதியான தாக்கத்திற்குள்ளாகி சரியான முறையில் பரீட்சைக்கு தோற்றமுடியால் இருப்பதே மிக மிக அவதானம் கொடுத்து தீர்க்ப்பட வேண்டிய முக்கிய விடயமாகும்.

எனவே, பரீட்சைகள் ஆரம்பிக்கப்படும் வரை இருக்காமலும், பிரச்சினைகள் உருவெடுக்கும் வரையில் அமைதியாக இருக்காமலும் முஸ்லிம் தலைமைகள் குறிப்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள் கல்வியமைச்சர், மற்றும் பரீட்சை திணைக்கள அதிகாரிகள் ஆகியோரைத் தொடர்பு கொண்டு முன்னேற்பாடான நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகும்.

மாகான சபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களும் இதுவிடயத்தில் தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் மாகான மற்றும் பிரதேச கல்வியமைச்சுக்களையும், பரீட்சைகள் தொடர்பான அரச இயந்திரங்களையும் தொடர்பு கொண்டு பரீட்சாத்திகளுக்கும், பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கும் வழிகாட்டல்களை வழங்க காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் உங்களது கடமையாகும்.

பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களது கடமையும் பொறுப்பும்...

கடந்த காலங்களில் பரீட்சாத்திகளுக்கு ஏற்பட்ட அஸௌகரிகங்களுக்கு மாணவர்கள் மீதும் சில குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. குறிப்பாக முஸ்லிம் மாணவிகள் பர்தா அணிந்து வருகின்ற நிலையில் குறிப்புக்களை எடுத்து வந்து பார்த்து எழுதுவதாகவும், மேலும் சிலர் பர்தாவின் உட்புற பகுதியில் குறிப்புக்களை எழுதி வருவதாகவும் குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கபட்டன.

மேலும் சில மாணவிகள் பர்தாவினால் தங்களது வாய் பகுதியை மறைத்துக் கொண்டு பரீட்சை மண்டபத்தினுள் கதைப்பதாகவும், தகவல்களை பரிமாறிக் கொள்வதாகவும் தெரிவித்தனர். இதனால் சக மாணவர்களுக்கும் மேற்பார்வையாளர்களுக்கும் சங்கடமான நிலை ஏற்படுவதாகவும் தெரிவித்திருந்ததும் கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் அடிப்படைத் தன்மை கொண்டதாகவோ, அடிப்படையற்றதாகவோ இருக்கலாம். ஆயினும் ஒருசிலரது இவ்வாரான செயல்பாடுகள் காரணமாக எல்லா பரீட்சாத்திகளும் தண்டிக்கப்படலாம். பரீட்சை திணைக்ளத்தினால் அறிவுருத்தப்பட்டுள்ள வழிகாட்டல்களை மாணவர்கள் மதித்து நடப்பதும், பரீட்சை மண்டப அதிகாரிகளுக்கு தங்களது பணிகளை செய்வதற்கு ஒத்துழைப்பாக இருப்பதும் அவர்கள் மீதுள்ள கடமையாகும்.

பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் தாங்கள் பரீட்சை நிலையத்தில் எதிர்நோக்கும் சவால்களை சமாளிக்கும் திறன் கொண்டவர்களாக இருக்க வேண்டும். நாம் இழக்கின்ற ஒவ்வொரு உரிமையும், சலுகையும் எமது எதிர்கால சந்ததிகள் விடயத்தில் பாரிய சிக்கல்களைத் தோற்றுவிக்கும் என்பதை கருத்திற்கொள்ள வேண்டும்.

குறிப்பாக இம்முறை உயர்தர பரீட்சை நிலையங்களாக முஸ்லிம் பாடசாலைகள் தெரிவு செய்யப்படுவதற்கான சாத்தியங்கள் மிகக் குறைவாகவே காணப்படுகிறன. எனவே முஸ்லிம் பாடசாலைகளுக்கு சென்ற மாணவர்கள் வேறு பாடசாலைகளுக்கு செல்லும் போது இயற்கையாகவே ஓர் அச்ச உணர்வும், மனக்குழப்பமும் இருக்கலாம். எனவே மாணவர்கள் முன்கூட்டியே இவற்றை எதிர்கொள்ள தம்மை தயார் படுத்திக்கொள்ள வேண்டும்.

பரீட்சை மண்டபத்திலோ, மண்டபத்திற்கு வெளியிலோ தமக்கு அல்லது சக மாணவருக்கு ஏற்படும் அஸௌகரிகங்களை துணிந்து தட்டிக் கேட்கவும், அவற்றுக்கான நீதியை பெற்றெடுக்கவும் தயங்கக் கூடாது. அவ்வாரான விடயங்களை உடனுக்குடன் சமூகமயப்படுத்தி சட்ட ரீதியான முன்னெடுப்புக்களையும் செய்தாக வேண்டும். அவ்வாரான அதிகாரிகளை இனம்கண்டு அவர்களை சட்டத்தின் முன் நிருத்தவும் தயங்கக் கூடாது.

முஸ்லிம் மாணவர்கள் பரீட்சை மண்டபங்களில் எதிர்நோக்கும் அடுத்த மிகப்பெரிய பிரச்சினை சிங்கள மொழி புரியாமையே. இது எமது சமூகம் பொதுவாக எல்லா இடங்களிலும் எதிர்கொள்ளும் ஒரு பிரதான பிரச்சினையும் கூட. பொதுவாக தமிழ் மொழி தெரிந்த மேற்பார்வையாளர்களும் மண்டபத்தினுள் இருப்பார்கள். அவ்வாரு தமிழ் மொழி தெரிந்த அதிகாரிகளோ, மேற்பார்வையாளர்களோ இல்லையாயின் அதுகுறித்தும் எமது சமூக தலமைகள் கவனமெடுக்கவும் வேண்டும்.

எனவே உங்களது பிரச்சினைகளை தமிழ் மொழி தெரிந்த அதிகாரிகளை அனுகி அல்லது உங்களுக்குள் இருக்கும் சிங்களம் தெரிந்த மாணவரின் உதவியைப் பெற்று அவற்றை தீர்த்துக் கொள்ள வேண்டும்.

எதிர்பாராத அசம்பாவிதங்கள் ஏற்பட்டு மாணவர்கள் அதனை எழுத்து வடிவில் சமர்பிக்க வேண்டியேற்பட்டால் தமக்கு நன்கு புலமையான பாஷையிலே அதனை சமர்பிக்க வேண்டும். மேலும் தமக்கு புலமை இல்லாத பாஷையில் எழுதப்பட்ட எந்த ஆவணத்திற்கும் கையொப்பம் இடுவதையோ, உடண்படுவதையோ தவிர்ந்து கொள்ளவும் வேண்டும்.

பரீட்சை மண்படத்தில் ஏற்படும் சிறு சிறுவிடயங்களுக்கு மாணவர்களை போட்டோ பிடிப்பதற்கோ, அல்லது அவர்களது சுட்டெண்களை குறித்து செல்வதற்கோ யாரக்கும் எந்த அதிகாரமும் வழங்கப்பட்டில்லை என்பதை அனைவரும் கருத்திற் கொள்ள வேண்டும். அவ்வாரான முறைகேடான விடயங்கள் நடப்பதற்கு யாரும் அனுமதியளிக்கக் கூடாது.

இம்முறை உயர்தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு கடந்த காலங்களில் ஏற்பட்ட எந்தவொரு சிரு அசம்பாவிதமும் நடைபெறாதிருக்க சகலரும் இனம் மதம் கடந்து செயல்பட வேண்டும். இம்மாணவச் செல்வங்கள் தங்களது பரீட்சைக்கு சிறந்த முறையில் தோற்றி அவர்களது அறிவும் அடைவும் அவர்கள் சார்ந்த சமூகத்தையும் தாண்டி இந்த நாட்டிற்கும் முழு உலகிற்கும் பயனுள்ளதாக அமைய பிரார்த்திக்கிறேன்.



## மனநலமும் ஆலோசனையும் 11

# மனைவியை மதித்தல்

(எங்கள் முன்னைய பதிவில் மணவாழ்வில் மரியாதை பற்றி தெரிந்து கொண்டோம். இன்றைய பதிவில் மனைவிக்கு எப்படி மதிப்புக் கொடுப்பது என்று புரிந்து கொள்வோம்) அவமானப்படுத்தப்பட்டாலோ அல்லது சிறுமைப்படுத்தப்பட்டாலோ எங்கள் திருமண துணை காயமடைகிறாள். மதிக்கப்படும்போது அவள் மணமேடை மனம் தருவதை நன்றாகவே உணர்கிறாள். தன்னை இழிவுபடுத்த முயற்சிப்பவர்களை வெறுக்கிறாள். இதுதான் மனித இயல்பு.

மற்றவர்களை விட தன் கணவன் தன்னை அதிகமாக மதிக்க வேண்டும் என்று மனைவி நிச்சயமாக எதிர்பார்க்கிறாள். தன்னை கரம் பிடித்தவர் தன்னைக் கவனித்துக் கொள்ள வேண்டும், மதிக்க வேண்டும் என்று எதிர்பார்க்க அவளுக்கு எல்லா உரிமையும் உண்டு.

நம் மனைவிக்கான மதிப்பை வெவ்வேறு வடிவங்களில் கொடுக்கலாம். அதை எல்லா கணவனாலும் செய்யலாம். அது ஒன்றும் முடியாத காரணம் அல்ல. சில சிறிய விடயங்களை செய்வதன் மூலம் இந்த மதிப்பை கொடுப்பதற்கான பயணத்தை தொடங்கலாம். சில வழிமுறைகளை இங்கு தருகிறோம். இவை போன்ற உங்களுக்கு விருப்பமான முறைகளை செய்தும் பார்க்கலாம்.

* அவளுடன் பேசும் போது புன்னகை நிறைந்த முகத்துடன் பேசலாம்.
* அவள் பேசுவதை அவள் அருகில் உட்கார்ந்து அமைதியாக கேட்கலாம்.
* அவளது மகிழ்ச்சியான நேரங்களையும் சோகமான நேரங்களையும் பகிர்ந்து கொள்ள வாய்ப்பு வழங்கலாம்
* நம் மனைவியின் விருப்பு வெறுப்புகளை நாம் ஒரே மாதிரியாக இல்லாமல் பல வழிகளில் தெரிந்து கொள்ளலாம்.
* அவளுடைய நிலைமைகளை புரிந்து அவளுக்கு உதவலாம்.
* நாம் மிகவும் அக்கறையுடன் அவளை நேசிக்கிறோம் என்பதை அவளுக்கு உணர்த்தலாம்.
* அவளின் கருத்துகளையும் யோசனைகளையும் எடுத்துக் கொள்ளலாம்.
* அவளுக்கு பிடித்த வாசனை அல்லது அவள் விரும்பும் எதையும் பரிசளிக்கலாம்.
* அவள் சமையலை நாம் பாராட்டலாம்.
* அவளது தவறுகளை தனிப்பட்ட முறையில் திருத்தலாம்.
* அவள் கோபமாக இருந்தாலோ, பிடிவாதமாக இருந்தாலோ, அவள் மனநிலையில் ஏற்ற இறக்கங்கள் இருந்தாலோ அமைதியாக இருந்து நிலைமை சீராகும் போது அவளுக்கு விளக்கிச் சொல்லலாம்.
* அவளை மற்றவர்களுடன் ஒப்பிடாமல் இருப்பதுகூட அவளை மதிக்கிறோம் என்பதற்கான ஒரு சான்றாகும்.

அவளை மதிக்கவும் மகிழ்விக்கவும் நாம் இப்படி சிறிய விடயங்களைச் செய்யலாம். பெரிதாக ஒன்றும் தேவையில்லை.

இந்த சிறிய விடயங்கள் அனைத்தும் மதிப்பையும் அசைக்க முடியாத நம்பிக்கையையும் உருவாக்கிவிடும்.

அவள் நமக்காகவும் நம் குழந்தைகளின் நல்வாழ்வுக்காகவும் அன்றாடம் உழைக்கிறாள், எனவே அவளுடைய முயற்சிகளுக்கு மதிப்பளித்து அவளை மதிக்க வேண்டும் என்று அவள் எதிர்பார்ப்பதில் தவறில்லை.

கணவன்-மனைவி இரு தரப்பிலும் ஒருவருக்கு ஒருவர் மரியாதையாக இருந்தால், மணபந்தம் சமநிலையடைந்து ஆரோக்கியமான உறவுகள் உருவாகிவிடும்.

மணஉறவில் மதிப்பு இருக்கும்போது அங்கே திருமணக்காதல் தானாகவே வளர்ந்து வாசம் வீசும்.

நாம் அனைவரும் நமது வாழ்க்கைத் துணைகளையும், நமது திருமண உறவுகளையும் மதித்து, நமது துணையுடன் கைகோர்த்து மகிழ்ச்சியான அழகான ஆரோக்கியமான திருமண பந்தத்தை நோக்கி பயணம் செய்யலாம்.

(எமது அடுத்த பதிவில் கணவனை மதிப்பது எப்படி என்று நோக்குவோம் ..!)



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

# வெளிநாடு செல்ல ஆயத்தமா? கவனம்: ஏமாற வேண்டாம்

(ஐ. ஏ. காதிர் கான்)

"வெளிநாட்டு வேலை வாய்ப்பு வழங்கப்படும்" என, சமூக வலைத்தளங்களில் வெளியாகும் போலி விளம்பரங்களில் சிக்கிக் கொள்ள வேண்டாம் என, இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் பொதுமக்களிடம் கேட்டுள்ளது.

சரியான முறையில் வெளிநாடு செல்வதன் மூலம் ஏற்படும் பிரச்சினைகளுக்கு மாத்திரமே, இலங்கை அதிகாரிகளால் தலையீடு செய்ய முடியும்.

எனவே, இதனைக் கருத்திற்கொண்டு, யாரும் சமூக வலைத்தளங்களில் வெளியாகும் வெளிநாடு செல்வது தொடர்பான போலி விளம்பரங்களிலோ அல்லது போலி முகவர்களிடமோ சிக்கிக் கொள்ள வேண்டாம் எனவும், வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காகச் செல்வதாயின், முதலில் நம்பிக்கையான முகவர்களைத் தேர்ந்தெடுக்குமாறும், அதன் அடுத்த கட்டமாக பணியகத்தின் சரியான அறிவுறுத்தல்களைப் பின்பற்றிச் செல்லுமாறும், பணியகம் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

வெளிநாடு செல்பவர்களின் பணத்தையும், பாதுகாப்பையும் உறுதி செய்து, அவர்களுக்கு ஏற்படும் வீண் அலைச்சல்களைத் தவிர்ப்பதுமே பணியகத்தின் பிரதான குறிக்கோள் என்றும், இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் மேலும் சுட்டிக் காட்டியுள்ளது.

# ஒன்பது மாவட்டங்களில் குழந்தைகளுக்கு தட்டம்மை நோய்

(ஐ. ஏ. காதிர் கான்)

தட்டம்மை நோயாளர்களின் எண்ணிக்கை, ஒன்பது மாவட்டங்களில் அதிகரித்துள்ளதாக, சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், தட்டம்மை தடுப்பூசியை, 6 மாதம் முதல் 9 மாதம் வரையிலான குழந்தைகளுக்கு "ஒரு டோஸ்" என்ற அடிப்படையில் வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, சுகாதார அமைச்சின் செயலாளர் டொக்டர் பாலித்த மஹிபால தெரிவித்துள்ளார்.

தட்டம்மை நோயாளர்கள் அதிகம் பதிவாகும் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, குருநாகல், கண்டி, கல்முனை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் இந்தத் தடுப்பூசித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாகவும் டொக்டர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தடுப்பூசித் திட்டம், ஜனவரி மாதம் 6 ஆம் திகதி காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை செயற்படுத்தப்படும் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# தேசிய காங்கிரஸ் கட்சிக்குள் குழப்பம்? பதவிகளை விட்டு விலகினார் சகி அதாவுல்லா

(நூருல் ஹுதா உமர்)

தேசிய காங்கிரஸின் உதவி செயலாளர் நாயகமும், அக்கரைப்பற்று மாநகர சபை முன்னாள் முதல்வருமான தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல். எம். அதாஉல்லாவின் சிரேஷ்ட புதல்வர் அதாஉல்லா அஹமட் சகி தனது தந்தையின் கட்சியின் சகல பொறுப்புகளிலிருந்தும் நேற்று முதல் ராஜினாமா செய்துள்ளார்.

தனது ராஜினாமாவை தொடர்ந்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைத்தள அறிக்கையில், எத்தருணத்திலும் மாறிவிடாத எனது அன்பிலும், மரியாதையிலும் பங்கு கொண்டிருக்கும் தேசிய காங்கிரஸின் பேராளர்களே! நண்பர்களே!உடன்பிறப்புகளே பதவிகள், பட்டங்கள், உயர்வுகள் யாவும் இறைவனின் ஆசியுடன் மனிதர்களுக்கு வழங்கப்படும் அமானிதங்கள் என்பதில் நான் முழு நம்பிக்கை கொண்டவன் என்று தெரிவித்துள்ளார்.

மேலும் அவரது அறிக்கையில், இரண்டு தடவைகள் அக்கரைப்பற்று மாநகர முதல்வராக எனக்கு வழங்கப்பட்ட



அமானிதத்தை இயலுமானவரை பாதுகாத்திருக்கிறேன். மாநகரத்தின் வளர்ச்சிக்காகவும், திறன்பட அச்சபையினை வழி நடாத்துவதிலும் எனது முழுமையான பங்களிப்பினை செலுத்தி அதில் வெற்றியும் கண்டிருக்கிறேன். அல்ஹம்துலில்லாஹ். எனது காலத்தில் மாநகர சபை பல விருதுகளை வென்றுள்ளது. மக்கள் நலன் சார்ந்த பல்வேறு நலத்திட்டங்களை முன்னெடுத்துள்ளது. அர்ப்பணிப்புடனான இப்பணிக்கு என்னுடன் மாநகர சபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், உடன்பிறப்புக்களாகிய நீங்களும் செய்த உதவிகள் எத்தருணத்திலும் மறக்க முடியாதவை. அதற்காக நான் உங்களுக்கு நன்றி கூறுதல் மாத்திரம் தகாது.

வல்ல நாயகன் அல்லாஹ் நம் பணிகளை ஏற்றுக் கொள்வான் என்பதிலும், இதற்கான கூலியினை தந்தருள்வான் என்பதிலும் நான் அசையாத நம்பிக்கை கொண்டுள்ளேன்.

தேசிய காங்கிரஸினை பிரதிநிதித்துவப்படுத்தியும், அதன் தலைவரின் வழிகாட்டலிலும் கட்சியின் உதவி செயலாளர் நாயகம் பதவியில் எனது பயணம் மிக நீண்டது. தேசிய காங்கிரஸ் இலங்கையில் வாழ்கின்ற சகல மக்களுக்குமான நிம்மதியான வாழ்வினை பிரதிநிதித்துவப்படுத்தி செயல் களத்தில் பல்வேறு சாதனைகளையும், அபிவிருத்திகளையும் மேற்கொண்ட தார்மீகத்தின் வழியாக செயற்பட்ட அரசியல் தளமாகும்.

எமது உடன்பிறப்புக்கள் இக்கட்சியின் மீதும், அதன் தலைமையின் கொண்ட நம்பிக்கையும், பற்றும் என்னை எப்பொழுதும் பிரமிக்க வைத்திருக்கிறது. தேசிய காங்கிரஸின் உதவி செயலாளர் நாயகமாக பதவி வகித்த காலங்களில் கட்சிக்காக எனது உழைப்பென்பது திறந்த மனதுடனும், எண்ணமே வாழ்வெனும் அடிப்படையில் மிக நேர்த்தியாக கையாள முடிந்ததில் தன்னிறைவு அடைகிறேன். காலங்களும், சந்தர்ப்பங்களும் எமக்கு ஏராளமான பாடங்களை கற்றுத்தருகிறது. அனுபவமே நல்ல ஆசான் எனும் வாக்கிற்கு ஏற்ப என் வாழ்நாட்களில் இப்பயணத்தின் வழியே நிறையவற்றை கற்றிருக்கிறேன்.

இன்றிலிருந்து தேசிய காங்கிரஸின் உதவி செயலாளர் நாயகம் மற்றும் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவிகளிலிருந்து உத்தியோகபூர்வமாக விலகிக் கொள்ளவதற்கான கடிதத்தினை தேசிய காங்கிரஸின் தலைமையிடம் ஒப்படைத்து விட்டேன். இதுவும் ஒரு வகை அனுபவம்தான். ஆனாலும் தேசிய காங்கிரஸ் எமக்கான கட்சி என்பதால் அதன் அடிமட்ட தொண்டனாக இருந்து எனது பணியினை செய்து கொண்டேயிருப்பேன்.

கட்சிப் பணிகளில் எனது உழைப்பு எப்பொழுதும் தொடர்ந்து கொண்டேயிருக்கும். தலைமையின் வழிகாட்டலில் கட்சி உறுப்பினர்கள் அனைவருடனும் சேர்ந்து மிக உற்சாகமாக பயணிப்பேன். பதவிகள் மாத்திரம் ஓர் கட்சிக்கான விசுவாசத்தினை தீர்மானிப்பதில்லை என்பதினை இனிவரும் காலங்களில் செயற்படுத்த நினைக்கிறேன்.

இதுவரை காலமும் என்னுடன் கைகோர்த்து இக்கட்சி பணியில் களம் கண்ட உடன்பிறப்புக்களை மறவாது நெஞ்சில் இருத்திக் கொள்கிறேன் என்றும் தெரிவித்துள்ளார். கடந்த காலங்களில் தேசிய காங்கிரஸ் கட்சியை விட்டு பலரும் விலக செல்ல காரணம் இவருக்கு இவரது தந்தை வழங்கிய முன்னுரிமையும், தொடர்ந்தேர்ச்சியான அதிகார வழங்களுமே என்று பகிரங்க குற்றசாட்டு பொதுவெளியில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.